# 1994 இல் பொருளாதாரச் செயலாற்றம், பிரச்சினைகளும் கொள்கைகளும்

1993 இன் உறுதியான வளர்ச்சியைத் தொடர்ந்து உறுதியானதும் சாதகமானதுமான வளர்ச்சிச் செயலாற்றமும் தனியார் முதலீடுகளின் அதிகரித்த மட்டமும் நுகர்வோர் விலைகளின் அதிகரிப்பு வீதத்தில் கணிசமான வீழ்ச்சித் தன்மையும் 1994 இல் இலங்கையின் பொருளாதாரச் செயலாற்றத்தின் சிறப்பம்சங்களில் சிலவாகும். எனினும் உயர்ந்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை பாரிய அளவிலான வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மற்றும் இரண்டு தேசிய தேர்தல்களின் பின்னணியில் கொள்கைத் தளர்வுகளின் காரணமாக தொடர்ந்து நீடித்துவந்த உயர் நாணய வளர்ச்சி என்பன 1994 இல் பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தில் காணப்பட்ட கவலைக்குரிய விடயங்களாக இருந்தன. தேர்தல்களைத் தொடர்ந்து எழுந்த இன்னுமொரு குறிப்பிடத்தக்க வெளிப்பாடு என்னவெனில் அண்மைய ஆண்டுகளில் பின்பற்றப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் தொடரப்படுவதற்கான உத்தரவாதத்தினை வழங்கும் சிநேகபூர்வமான சந்தைப் பொருளாதார சூழ்நிலையை உறுதிப்படுத்துவதற்கும் பொருளாதார தாராள மயமாக்கல் நடவடிக்கைகளைத் தொடருவதற்குமான தனது கடப்பாட்டினை வெளிப்படுத்திய புதிய அரசாங்கத்தின் கொள்கை விளக்கக் கூற்றாகும்.

## பொதுவான செயலாற்றம்

உண்மை நியதிகளில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 6.9 சதவீத வளர்ச்சியைத் தொடர்ந்து 1994 இல் 5.6 சதவீதத்தினால் அதிகரித்தது. வெளிநாட்டிலிருந்தான தேறியகாரணி வருவாயை உள்ளடக்கிய மொத்தத் தேசிய உற்பத்தி 5.3 சதவீதத்தினால் அதிகரித்தது. பொருளாதார அபிவிருத்தியில் தனியார்துறையினரை முன்னணிக்குக் கொண்டுவந்த அண்மைய கால தாராளமயமாக்கல் ஊக்குவிப்புக்களையும் அமைப்புச் சீராக்கங்களினையும் தொடர்ந்து 1993 இல் உருவாக்கப்பட்ட அதிகரித்த வளர்ச்சி விசையில் சிறிதளவு குறைவினை இது பிரதிபலித்தபோதிலும் 1994 இன் பொருளாதாரச் செயலாற்றமானது பொருளாதாரத்தின் தொடர்ச்சியான மீட்சியினைக் காட்டிநின்றது. வெளிநாட்டுப் பக்கத்தில், வர்த்தக மாற்று விகிதம் 1993 இன் 2.0 சதவீத மேம்பாட்டிற்கு முரணாக 4.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுப் பக்கத்தில் 1994 இல் இலங்கை மூன்று தேர்தல்களைக் கடந்து சென்றதோடு இது அரசாங்கத்தின் மாற்றத்திற்கு இட்டுச்சென்றது. தேசிய தேர்தல்களினால் ஏற்பட்ட கொள்கைத் தளர்வுகளும் மற்றும் ஆண்டின் பிற்பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகளில் காணப்பட்ட தடங்கல்களும் வணிக நம்பிக்கையினை இழக்கச் செய்தன. இந்த வெளிப்பாடுகள் பொருளாதாரத்தில் பலதுறைகளின் செயலாற்றத்தில் சிக்கல்களை ஏற்படுத்தின.

தேயிலை, தெங்கு, நெல் என்பனவற்றின் உறுதியான வளர்ச்சியின் மத்தியிலும் வேளாண்மைத்துறை முன்னைய ஆண்டின் 4.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.3 சதவீத வளர்ச்சியை மட்டுமே பதிவு செய்தது. சிலவகையான புடவைகளின் அனுமதிப்பங்குகளின் ஒதுக்கீட்டில் காணப்பட்ட நிச்சயமற்ற

அட்டவணை 1.1

தேசிய வருமானப் புள்ளி விபரங்கள் 1992 – 1994

| விடயம் | தொகை (ப.இ. ரூபாய்களில்) | | | வளர்ச்சி வீதம் | |
|---|---|---|---|---|---|
| | 1992* | 1993* | 1994* | 1993* | 1994* |
| 1. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. | 386,999 | 453,092 | 523,300 | 17.1 | 15.5 |
| 2. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. | 140,990 | 150,783 | 159,269 | 6.9 | 5.6 |
| 3. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. | 379,179 | 447,113 | 515,272 | 17.9 | 15.2 |
| 4. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. | 138,074 | 148,744 | 156,662 | 7.7 | 5.3 |
| 5. நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.தே.உ. | 424,313 | 499,622 | 575,810 | 17.7 | 15.2 |
| 6. நடுவாண்டுக் குடித்தொகை ('000) | 17,405 | 17,619 | 17,865 | 1.2 | 1.4 |
| 7. தலைக்குரிய மொ. தே. உ. | | | | | |
| i. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் (ரூபா) | 21,786 | 25,377 | 28,843 | 16.5 | 13.7 |
| ii. நிலையான காரணிச் செலவு விலைகளில் (ரூபா) | 7,933 | 8,442 | 8,769 | 6.4 | 3.9 |
| iii. நடைமுறைச் சந்தை விலைகளில் (ரூபா) | 24,379 | 28,357 | 32,231 | 16.3 | 13.7 |

* தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

தன்மையினதும் ஆண்டின் இறுதிப்பாகத்தில் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஏற்பட்ட தடங்கல்களினதும் காரணத்தினால் தொழிற்சாலைக் கைத்தொழில் துணைத்துறையின் வளர்ச்சியில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சியின் காரணமாக தயாரிப்புத் துறையின் வளர்ச்சி 10.5 சதவீதத்திலிருந்து 9.1 சதவீதத்திற்கு குறைவடைந்தது. இதேவேளையில் வேளாண்மை மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளின் மெதுவான விரிவாக்கத்தினது தாக்கத்தின் காரணமாக பணிகள் துறையினது வளர்ச்சி 1993 இன் 6.3 சதவீதத்திலிருந்து 1994 இல் 5.2 சதவீதத்திற்கு மிதமடைந்தது.

பேரண்டப் பொருளாதாரச் சூழல் மோசமடைந்தமையும் தேசிய தேர்தல்களின் போதான கொள்கைத் தளர்வுகளும் 1993 இல் உருவாக்கப்பட்ட உயர்ந்த வளர்ச்சி விசையினைப் பாதிப்படையச் செய்வதாக இருந்தன. கட்டுப்படுத்தப்பட்ட அரசிறைக் கொள்கைகளின் தளர்த்தலானது அரசின் அரசிறைத் தொழிற்பாட்டில் பாரிய சமமின்மைகளை உருவாக்கியதுடன் பொருளாதாரத்தில் கணிசமான கேள்வித் தாக்கத்தினையும் ஏற்படுத்தியது. அரசின் வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முன்னைய ஆண்டில் ஏற்பட்ட 0.8 சதவீத பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2.9 சதவீதமான பாரிய பற்றாக் குறையினை உருவாக்கி நாட்டின் சேமிப்பு முயற்சியினை சோர்வடையச் செய்தது. அதியுயர் நடைமுறைச் செலவினத்தின் செல்வாக்கிற்குட்பட்டு மொத்த வரவு செலவுத் திட்டப்

பற்றாக்குறை முன்னைய ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 8.4 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு அதிகரித்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.5 சதவீதம் வரையிலான அதிகரித்த மட்டத்திலான உள்நாட்டுக் கடன்பாடுகளை அத்தியாவசியமாக்கியது. அரசின் உயர்ந்த உள்நாட்டுக் கடன்பாடுகள் மற்றும் வங்கித்தொழில் முறையிலிருந்து தனியார் துறைக்கான கடன்களின் உறுதியான அதிகரிப்பு என்பனவற்றின் விளைவாக நாணயக் கூட்டுக்கள் தொடர்ந்து அழுத்தத்திற்குள்ளாகி பண நிரம்பலை 19.7 சதவீதத்தினால் உயர்வடையச் செய்தது.

பொருளாதாரத்தின் அதிகரித்த கேள்வித் தாக்கத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் சேமிப்பு /மொ.உ.உ. விகிதம் 1993 இன் 16 சதவீதத்திலிருந்து 1994 இல் 15.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் முதலீடு /மொ.உ.உ. விகிதம் 25.6 சதவீதத்திலிருந்து 27 சதவீதத்திற்கு அதிகரித்து சேமிப்புக்களுக்கும் முதலீட்டிற்கும் இடையிலான மூலவள இடைவெளியை மேலும் விரிவாக்கியது. சேமிப்பு /மொஉஉ விகிதத்தின் வீழ்ச்சியானது முழுமையாகவே அரசின் சேமிப்புக்களின் வீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்டதாகும். உண்மையில் சேமிப்புக்களின் வீழ்ச்சியானது (1993 இன் எதிர்க்கணிய மட்டமான மொ.உ.உ. இன் 0.8 சதவீதத்திலிருந்து 1994 இல் 2.9 சதவீத அதிகரிப்பில் எடுத்துக்காட்டப்பட்டது) இவ்வாண்டின் தனியார் சேமிப்புக்கள் தொடர்ந்து அதிகரித்ததைக் குறித்துக் காட்டியது. இம்மொத்த சேமிப்புக்களினதும் முதலீட்டினதும் அபிவிருத்திகளுக்கு இணையாக சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை 1993 இன் மொ.உ.உ.இன் 3.8 சதவீதத்திலிருந்து 1994 இல் மொ.உ.உ. இன் 6.5 சதவீதத்திற்கு உயர்வடைந்து குறிப்பிடத்தக்களவிற்கு மோசமடைந்திருந்தது. இது மூலதனப் பாய்ச்சல்களின் மெதுவான தன்மையுடன் இணைந்து சென்மதி நிலுவையின் மொத்த மிகையினை 1993 இன் சிஉஉ 3,750 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஉஉ 1,730 இலட்சத்திற்கு வீழ்ச்சியடையச் செய்தது.

உள்நாட்டு விலைகளின் மீதான அதிகரித்த கேள்வித்தாக்கம் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் தெளிவாகக் காணப்பட்டதுடன் ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் உறுதியாக 12 சதவீதத்தில் காணப்பட்டது. தொடர்ந்து வந்த மாதங்களில் இச்சுட்டெண்ணானது அவ்வப்போது செய்யப்பட்ட தீர்வைக் குறைப்புக்கள், இறக்குமதித் தீர்வை விலக்களிப்புக்கள், வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் நோக்கில் அரசினால் அறிவிக்கப்பட்ட நிருவாக விலைக் குறைப்புக்கள் போன்ற பலதரப்பட்ட தற்றுணிபான வழிமுறைகளின் செல்வாக்கிற்கு உட்பட்டது. ஆண்டின் இறுதியில் மேம்பட்ட வழங்கல் நிலைமைகளும் பொருளாதாரத்தின் விலைத் தாக்கத்தினை மிதப்படுத்துவதற்குச் சாதகமாக அமைந்தன. எனவே, பொருளாதாரத்தில் கட்டுப்படுத்த முடியாத அதியுயர் கேள்வித் தாக்கத்தின் மத்தியிலும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான ஆண்டுப் பணவீக்கம் 8 சதவீத சராசரியைக் கொண்டிருந்தது. எனினும், 1994 இல் உறுதியான உயர் நாணய விரிவாக்கமானது தொடர்ந்தும் பொருளாதாரத்தில் கணிசமான பணவீக்கத் தாக்கத்தினைக் கொண்டிருந்தது. வரவு செலவுத் திட்டத்தின் நிலைத்து நிற்கும் குறைப்பொன்றின் ஊடாக இந்தக் கேள்வித் தாக்கம் குறைக்கப்பட்டு பொருளாதாரத்தின் அமைப்புக் கட்டுப்பாடுகளுக்கான ஏதுக்கள் அகற்றப்படாவிடின் இடைக்காலத்தில் விலை உறுதிப்பாட்டுடன் உயர் பொருளாதார வளர்ச்சியையும் உறுதிப்படுத்திக்கொள்வது கடினமான காரியமாகும்.


## தேசிய வருமானமும் செலவும்

*1994 இல் ரூ. 515 பில்லியன் என மதிப்பிடப்பட்ட நடைமுறைக் காரணிச் செலவு விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தி முன்னைய ஆண்டைவிட 15.2 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இதேவேளையில் உதவிக் கொடுப்பனவுகள் கழிக்கப்பட்ட மறைமுக வரிகளின் தாக்கத்திற்குச் சீராக்கப்பட்ட நடைமுறைக் காரணிச் செலவு விலைகளுக்குச் சமமான நடைமுறைச் சந்தை விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தியும் 15.2 சதவீதத்தினால் 1993 இன் ரூ. 500 பில்லியனிலிருந்து 1994 இல் ரூ. 576 பில்லியனுக்கு அதிகரித்தது. 1994 இல் இலங்கையின் நடுவாண்டுக் குடித்தொகை 178.7 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு 1993 இனைவிட 1.4 சதவீத குடித்தொகை வளர்ச்சியை பிரதிபலித்தது. இதற்கு நேரிணையாக நடைமுறைச் சந்தை விலைகளில் தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி 1993 இன் ரூ. 28,357 இலிருந்து (ஐ. அ. டொலர் 588) 1994 இல் ரூ. 32,231 இற்கு (ஐ.அ. டொலர் 652) 13.7 சதவீதத்தினால் அதிகரித்தது.*

*நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவு ரூ. 648 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு இது 1993 இனைவிட 18.3 சதவீத அதிகரிப்புமாகும். ரூ. 491 பில்லியனாக விளங்கிய நுகர்வுச் செலவு 1994 இல் 17.0 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. ரூ. 435 பில்லியனாக விளங்கிய தனியார் நுகர்வுச் செலவு முன்னைய ஆண்டின் 16.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 16.4 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. 1993 இல் அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடர்ந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீதும் காரணியல்லாப் பணிகளின் மீதுமான தனியார் நுகர்வுச் செலவு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மீதான செலவுகளைவிட (13.6 சதவீதம்) உயர்வீதமொன்றில் (24 சதவீதம்) அதிகரித்தது. இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்களில் உணவு குடிபானம், உந்து ஊர்திகள், மின் உபகரணங்கள் போன்ற நீண்டகால நுகர்வுப் பொருட்கள் கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்தன. அரசின் நுகர்வுச் செலவினத்தின் அதிகரிப்பு வீதம் 1993 இன் 11.8 சதவீதத்திலிருந்து 1994 இல் 22.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. இவ்வாண்டில் பொருட்கள் பணிகளின் கொள்வனவின் மீது அரசின் நடைமுறைச் செலவினத்தின் 22 சதவீத அதிகூடிய அதிகரிப்பே இதற்கான முதன்மைக் காரணியாக அமைந்தது.*

*ரூ. 154 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ள மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் 22.4 சதவீத அதிகரிப்பைக் காட்டியதுடன் 1994 இல் மூலதன இருப்பில் கணிசமான அதிகரிப்பைப் பிரதிபலித்தது. இதன்படி முதலீடு/மொ.உ.உ. விகிதம் 1993 இன் 25.6 சதவீதத்திலிருந்து 1994 இல் 27 சதவீதத்திற்கு அதிகரித்தது. அண்மைக் காலப் போக்கினைப் பின்பற்றும் வகையில் மூலதன ஆக்கத்துக்கான பாரிய பங்களிப்பு தனியார் துறையிலிருந்தே பெறப்பட்டது. தனியார் முதலீடானது பொறிகளும் கருவிகளும், போக்குவரத்துக் கருவிகள், வதிவுக்கான மற்றும் வதிவுக்கல்லாத கட்டடங்களின் நிருமாணம் ஆகியவற்றிலேயே பெருமளவு காணப்பட்டது. இதே வேளையில் அரச முதலீடானது துறைமுகப் பணிகள், தொலைத் தொடர்பு, பாதைகள் மற்றும் குழாய் நீர் வழங்கல் போன்ற உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளில் பெருமளவு செறிந்து காணப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான அரச முதலீடு 1993 இன் 8 சதவீதத்திலிருந்து 1994 இல் 7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.*

## மொத்தத் தேசிய உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 1.2**
**மொத்தத் தேசிய உற்பத்தியின் உள்ளடக்கமும் வளர்ச்சி வீதமும் 1992 – 1994**
**நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்**

| விடயம் | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | வளர்ச்சி வீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1992* | 1993* | 1994* | 1992* | 1993* | 1994* |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில் | 30,090 | 31,554 | 32,593 | - 1.6 | 4.9 | 3.3 |
| இதில் : | | | | | | |
| 1.1 தேயிலை | 2,303 | 2,985 | 3,116 | - 25.7 | 29.6 | 4.4 |
| 1.2 இறப்பர் | 669 | 681 | 688 | 2.1 | 1.8 | 1.0 |
| 1.3 தெங்கு | 2,971 | 2,799 | 3,376 | 5.1 | -5.8 | 20.6 |
| 1.4 நெல் | 5,882 | 6,447 | 6,750 | - 2.0 | 9.6 | 4.7 |
| 1.5 ஏனையவை (ஏனைய வேளாண்மை, காட்டுத்தொழிலும் கடல்தொழிலும்) | 18,265 | 18,642 | 18,663 | 1.6 | 2.1 | 0.1 |
| 2. சுரங்கம் அகழ்தலும் கல் உடைத்தலும் | 3,300 | 3,693 | 3,915 | -6.0 | 11.9 | 6.0 |
| 3. தயாரிப்பு | 26,059 | 28,806 | 31,418 | 8.8 | 10.5 | 9.1 |
| 3.1 தேயிலை, இறப்பர், தெங்கு உள்ளீட்டு பொருட்களின் பதனிடல் | 2,912 | 3,157 | 3,567 | -12.6 | 8.4 | 13.0 |
| 3.2 ஏனையவை | 23,147 | 25,649 | 27,851 | 12.3 | 10.8 | 8.6 |
| 4. கட்டடவாக்கம் | 9,765 | 10,400 | 11,024 | 8.1 | 6.5 | 6.0 |
| 5. பணிகள் | 71,776 | 76,330 | 80,319 | 5.3 | 6.3 | 5.2 |
| 6. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 140,990 | 150,783 | 159,269 | 4.3 | 6.9 | 5.6 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -2,916 | -2,039 | -2607 | – | – | – |
| 8. மொத்த தேசிய உற்பத்தி | 138,074 | 148,744 | 156,662 | 4.4 | 7.7 | 5.3 |

* தற்காலிகமானவை.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

உள்நாட்டுச் சேமிப்புக்கள் 1993 இன் ரூ. 80 பில்லியனிலிருந்து 1994 இல் ரூ. 88 பில்லியனுக்கு 9.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் 1993 இல் 15 சதவீதத்திலிருந்து 16 சதவீதத்திற்கு மேம்பாடடைந்த சேமிப்பு/மொ.உ.உ. விகிதம் அரசின் சேமிப்பு முயற்சி நலிவடைந்தமையின் காரணமாக 1994 இல் 15.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அரச சேமிப்புக்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.8 சதவீத எதிர்க்கணியமட்டத்திலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. உண்மையில் இது தனியார் சேமிப்பு/மொ.உ.உ. விகிதம் 1993 இன் 16.8 சதவீதத்திலிருந்து 1994 இல் 17.9 சதவீதத்திற்கு அதிகரித்தமையைக் குறிக்கின்றது. இதேவேளையில் குறைவான மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்களின் தாக்கத்தின் கீழ் தேசிய சேமிப்புக்கள் அதாவது தேறிய தனியார் மாற்றல்களுக்கும் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய்க்கும் சீராக்கம் செய்யப்பட்ட உள்நாட்டு தேசிய சேமிப்புக்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பாக 1993 இன் 20.3 சதவீதத்திலிருந்து 1994 இல் 19.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. பொருளாதாரத்தில் அதியுயர் மொத்தக் கேள்வியினைப் பிரதிபலிக்கும் வகையில் முதலீடு – சேமிப்பு இடைவெளி 1993 இன்

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.3 சதவீதத்திலிருந்து 1994 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.9 சதவீதத்திற்கு விரிவடைந்தது.

## மொத்த உள்நாட்டு உற்பத்தியின் போக்குகள்


உண்மை நியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி முன்னைய ஆண்டின் உயர்ந்த வளர்ச்சி வீதமாகிய 6.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் 5.6 சதவீதத்தினால் அதிகரித்தது. 1994 இல் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளும் தமது வளர்ச்சி விசையினைத் தொடர்ந்தன. எனினும் பேரண்டப் பொருளாதார சூழ்நிலையின் பாதகமான நிலைமைகளின் காரணமாகவும் தேசிய தேர்தல்களின் மத்தியில் கொள்கைத் தளர்வுகள் காரணமாகவும் இவை மெதுவான வேகத்தையே கொண்டிருந்தன. பணிகள் துறை (கட்டுமானத்தையும் உள்ளடக்கியது) தேசிய பொருளாதாரத்தில் அதனது அதிமுக்கிய இடத்தைப் பேணிவந்ததோடு வளர்ச்சியின் முக்கிய மூலமாக விளங்கி 1994 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியில் 54.3 சதவீதத்திற்கு வகைகூறியது. அண்மைய ஆண்டுகளில் கணிசமான தூண்டுதலினை வழங்கிய கைத்தொழில் துறை 1994 இல் 9.1 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியில் 30.8 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தவேளையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியில் வேளாண்மைத்துறையின் (சுரங்க அகழ்வும் கல்லுடைத்தலும் உட்பட) பங்கு 1994 இல் 14.9 சதவீதமாக விளங்கியது.

## முதலாந்தர துறை

1993 இல் 4.9 சதவீத வளர்ச்சியுடன் உறுதியாக மீட்சியடைந்த வேளாண்மைத் துறை 1994 இல் 3.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மொத்த வேளாண்மைத்துறையில் ஏறக்குறைய 50 சதவீதத்திற்கு வகைகூறும் ஏனைய வேளாண்மைத் துணைத்துறையில் காணப்பட்ட கிட்டத்தட்ட 0.1 சதவீதமான வீழ்ச்சியின் மத்தியிலும் தேயிலை, நெல், தெங்கு, என்பனவற்றின் உற்பத்தியினது உறுதியான அதிகரிப்பானது 1994 இல் வேளாண்மைத் துறையின் உற்பத்தியின் மொத்த அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தது. சாதகமான வானிலைத் தன்மைகள் குறிப்பாக தேயிலை, நெல் என்பனவற்றின் வளர்ச்சியை உறுதிப்படுத்திக்கொள்ள வாய்ப்பளித்தன. பெருந்தோட்ட வேளாண்மையில் தேயிலை, இறப்பர், தெங்கு என்பனவற்றின் உற்பத்தி 1994 இல் முறையே 4.8 சதவீதத்தினாலும் 1.0 சதவீதத்தினாலும் 20.6 சதவீதத்தினாலும் அதிகரித்தது. தெங்கு உற்பத்தியின் கணிசமான அதிகரிப்புக்கு 1993 இல் நிலவிய சாதகமான வானிலைத் தன்மைகளின் காலங்கடந்த தாக்கமே காரணமாகியது. இதேவேளையில் நெல் உற்பத்தி 4.7 சதவீதத்தினால் அதிகரித்தது. இந்த முக்கிய பயிர் வகைகளின் கணிசமான உற்பத்தி அதிகரிப்புக்கள் மொத்த வெளியீட்டில் 0.1 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்த ஏனைய வேளாண்மை துணைத்துறையின் நலிவுற்ற செயலாற்றத்தினை ஓரளவு எதிரீடு செய்தன. வேளாண்மைத் துணைத்துறையில் துணை உணவுப் பயிர்கள், கரும்பு, கால்நடை வளர்ப்பு மற்றும் பண்ணை உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் உற்பத்தியில் அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது. எனினும் சிறு ஏற்றுமதிப் பயிர்கள், காய் கறிகள், பழவர்க்கங்கள் என்பனவற்றின் உற்பத்தி பின்னடைவினைக் கொண்டிருந்தது. மீன்பிடித் துணைத்துறையின் வளர்ச்சிவீதம் 1993 இன் 7.1

## கைத்தொழில் மூலங்களின்படியான மொத்த உள்நாட்டு உற்பத்தி

நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்




இலங்கை மத்திய வங்கி

சதவீதத்திலிருந்து 1994 இல் 1.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில், காட்டுத்தொழில் துணைத்துறை முன்னைய ஆண்டினைப் போலவே சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்து அண்மைய ஆண்டுகளில் பெருமளவில் காடுகள் அழிக்கப்பட்டு மர வளங்கள் குறைந்து செல்வதன் தாக்கத்தினைப் பிரதிபலித்தது.

இரத்தினக்கற்களின் அதிகரித்த ஏற்றுமதிகளினதும் தயாரிப்பு மற்றும் கட்டுமான கைத்தொழில்களில் பயன்படுத்தப்பட்ட கல் தொகுதிப் பொருட்களின் அதிகரித்த கேள்வியினதும் தாக்கத்தின்கீழ் 1994 இல் சுரங்க அகழ்வு, கல்லுடைத்தல் துறை 6.0 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது.

## தயாரிப்புத் துறை

அண்மைய ஆண்டுகளில் முக்கிய வளர்ச்சித் துறையாக உருவாகியுள்ள தயாரிப்புத்துறை முன்னைய ஆண்டின் 10.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் 9.1 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. எனினும் முன்னைய ஆண்டைப்போலவே பொருளாதார வளர்ச்சிக்கான உந்துசக்தி கைத்தொழில் துறையிலேயே உருவாக்கப்பட்டது. தயாரிப்புத் துறையில் கூட்டிய பெறுமதி மற்றும் ஏற்றுமதி வருவாய் என்பனவற்றிற்கு பங்களிப்புச் செய்த நியதிகளில் அதிமுக்கிய துணைத்துறையாக விளங்கிய தொழிற்சாலைக் கைத்தொழில் முன்னைய ஆண்டின் 11.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1994 இல் 8.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. கைத்தொழில் நடவடிக்கைகளின் தடங்கல்கள், ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கான புடவை அனுமதிப்பங்கீட்டின் நிச்சயமற்ற தன்மை, இவ்வாண்டில் கொள்கை முரண்பாடுகளின் காரணமாக முதலீட்டாளர் நம்பிக்கை இழப்பு, என்பனவற்றினால் தொழிற்சாலைக் கைத்தொழிலின் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. 1994 இல் உறுதியான செயலாற்றத்தைக் காட்டிய தொழிற்சாலைக் கைத்தொழிலின் கீழான கைத்தொழில் வகைகளாக உணவு குடிபானம், புடவைகள் அணியும் ஆடைகள், தோல் உற்பத்திப் பொருட்கள், உலோகமல்லாக் கனிப்பொருள் வகைகள் என்பன விளங்கின. பெருந்தோட்ட வேளாண்மை உற்பத்தியின் வளர்ச்சியானது தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் பதனிடல் கைத்தொழிலின் கூட்டிய பெறுமதியினை 1993 இன் 8.4 சதவீதத்திற்கு எதிராக 1994 இல் 13 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு இயலச் செய்தது. அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் தொழிற்சாலைக் கைத்தொழில்களிலிருந்தான தென்பு என்பனவற்றின் காரணமாக 1994 இல் சிறுகைத்தொழில்கள் துணைத்துறை 5.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய கைத்தொழில்கள் துணைத்துறை 1993 இன் 6.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 6.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இக் கைத்தொழில் வகையினது வளர்ச்சியில் தாக்கத்தினைக் கொண்டிருந்த மிக முனைப்பான காரணியாக அரிசி ஆலைகளின் விரிவாக்கம் அமைந்திருந்தது.

## கட்டுமானம்

கட்டுமானத்துறை தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக தொடர்ந்து உயர்வளர்ச்சி வீதத்தினை உறுதிப்படுத்தியதுடன் 1994 இல் இத்துறையின் கூட்டிய பெறுமதி 6.0 சதவீதத்தினால் அதிகரித்தது. இத்துறையின் உறுதியான வளர்ச்சியானது

வீடமைப்பு மற்றும் வர்த்தக, கைத்தொழில் கட்டடங்களில் தனியார்துறைக் கட்டுமான நடவடிக்கைகளின் விரிவாக்கத்தை முக்கியமாகப் பிரதி பலித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1994 இல் அரசதுறைக் கட்டுமானம் சார்பு ரீதியில் மிகத் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டது.

**பணிகள் துறை**

வேளாண்மை மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளின் வளர்ச்சி வேகம் குறைவடைந்தமையினால் பணிகள் துறை முன்னைய ஆண்டின் 6.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1994 இல் சிறிது தாழ்ந்த வளர்ச்சி வீதமான 5.2 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. பணிகள் துறையில் போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொலைத் தொடர்புகள் துறை 3.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மொத்த விற்பனவு மற்றும் சில்லறை வர்த்தகத்துறை 6.4 சதவீத மொத்த வளர்ச்சியைப் பதிவு செய்தது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்தின் விரிவாக்கமே இதற்கான முதன்மைக் காரணியாக விளங்கியது. இவ்வாண்டின் அதிகரித்த மழைவீழ்ச்சி 1994 இல் நீர்மின்வலு உருவாக்கத்தின் 7.7 சதவீத வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தது. இது குழாய் நீர் வழங்கலின் விரிவாக்கத்துடன் இணைந்து மின்வலு, நீர், வாயு, நலப் பணிகள் துறையின் உயர் வளர்ச்சி வீதத்திற்குப் பங்களிப்புச் செய்த காரணியாக விளங்கியது. வங்கித் தொழில், நிதி மற்றும் உண்மைச் சொத்துக்கள் 1993 இன் 10.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1994 இல் 9.5 சதவீதத்தினால் அதிகரித்தன. நிதிப் பணிகளின் பாரிய பன்முகப்படுத்தலைத் தொடர்ந்து ஆய்வுக்குரிய காலப்பகுதியில் வங்கித்தொழில் துணைத்துறை உறுதிப்பாட்டினைக் கொண்டிருந்தது. 1993 இல் பின்னடைவினைக் கொண்டிருந்த சுற்றுலா துணைத்துறை சுற்றுலா வருகைகளும் சுற்றுலாவிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி (சிஎஉ பெறுமதியில்) வருவாய்களும் முறையே 3.9 சதவீத, 10.2 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவு செய்தமையைத் தொடர்ந்து 1994 இல் மீட்சியடைந்தது. சுற்றுலாக் கைத்தொழிலின் விரிவாக்கமானது ஏனைய பணிகள் துறை 1993 இன் 2.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் 2.5 சதவீத வளர்ச்சி வீதத்தினைப் பேணுவதற்கு உதவிசெய்தது.

**வேளாண்மை**

1994 இல் 2,420 இலட்சம் கிலோக்கிறாம்கள் என மதிப்பிடப்பட்டுள்ள தேயிலை உற்பத்தி இதுவரை பதிவு செய்யப்பட்டவற்றில் அதிஉயர்வானதாகவும் முன்னைய ஆண்டின் உற்பத்தியைவிட 4 சதவீதம் அதிகமானதாகவும் இருந்தது. சாதகமான வானிலைத் தன்மைகள், தனியார் முகாமைத்துவக் கம்பனிகளின் கீழான மேம்பட்ட முகாமைத்துவம், முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்ட வளமாக்கியின் காலங்கடந்த தாக்கம் என்பன 1994 இல் உற்பத்தியின் அதிகரித்த மட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தன. 1993 இல் 1,120 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 28 சதவீதத்தினால் அதிகரித்த தாழ்நிலத் தேயிலையின் வெளியீடு 1994 இல் மேலும் 5 சதவீதத்தினால் 1,180 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு அதிகரித்தது. உயர்நிலத் தேயிலையின் வெளியீடு 6 சதவீதத்தினால் 770 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு கணிசமாக அதிகரித்த வேளையில் மத்திய நிலத் தேயிலை பெரும்பாலும் 1993 இன் அதே மட்டத்தில் 470 இலட்சம் கி. கிறாம்களாக மாறாது காணப்பட்டது.

இதேவேளையில் சிரிசி (வெட்டி, கிழித்து, சுருட்டிய) தேயிலை உற்பத்தி 1994 இல் 40 சதவீதத்தினால் 112 இலட்சம் கிலோக் கிறாம்களுக்கு அதிகரித்தது. இதன்விளைவாக மொத்த உற்பத்தியில் சிரிசி தேயிலையின் பங்கு 1993 இன் 3 சதவீதத்திலிருந்து 1994 இல் 4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

கொழும்பு ஏலங்களில் அனைத்துத் தேயிலைகளினதும் சராசரி ஏற்றுமதி விலை (கஏபெ) கிலோக்கிறாம் ஒன்றுக்கு 1993 இன் ரூ. 91.16 இலிருந்து 1994 இல் கிலோக்கிறாம் ஒன்று ரூ. 91.32 இற்கு சிறிதளவு அதிகரித்தபோதிலும் சராசரி மொத்த விலை 1993 இன் கிலோக்கிறாம் ஒன்று ரூ. 68.88 இலிருந்து 1994 இல் கிலோக்கிறாம் ஒன்று ரூ. 65.12 இற்கு 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதேவேளையில் 1992 இலும் 1993 இலும் அதிகரிப்புக்களைக் கொண்டிருந்த தேயிலையின் சராசரி உற்பத்திச் செலவு 1994 இல் 3 சதவீதத்தினால் கிலோக்கிறாம் ஒன்று ரூ. 73.83 இற்கு வீழ்ச்சியடைந்தது.

1994 இல் 1,050 இலட்சம் கிலோக்கிறாம்கள் எனமதிப்பிடப்பட்ட இறப்பர் உற்பத்தி முன்னைய ஆண்டைவிட சிறிதளவான ஒரு சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. 1994 இல் இறப்பரின் கீழ் பதிவு செய்யப்பட்ட மொத்தப் பரப்பு 794 எக்டேயர்களினால் 191,554 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்த போதிலும் பால் எடுத்தலின் கீழான பரப்பு 4 சதவீதத்தினால் 151,600 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. மொத்த வெளியீட்டில் 42 சதவீதத்திற்கு வகைகூறிய தட்டை இறப்பர் 1 சதவீதத்தினால் 440 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு அதிகரித்த வேளையில் கிறேப் இறப்பரின் வெளியீடு 4 சதவீதத்தினால் 350 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு அதிகரித்தது. மாறாக, தொழில்நுட்ப ரீதியில் வகைப்படுத்தப்பட்ட இறப்பர் உற்பத்தி 6 சதவீதத்தினால் 130 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இறப்பரின் சராசரி விளைச்சல் 1993 இன் எக்டேயர் ஒன்றுக்கு 714 கிலோக்கிறாம்களிலிருந்து 1994 இல் எக்டேயர் ஒன்றுக்கு 692 கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. விளைச்சலின் குறைப்புக்கு அனுபவம் மிக்க பால் எடுப்போரின் பற்றாக்குறையின் காரணமாக பால் எடுக்கும் நாட்கள் இழக்கப்பட்டமையே காரணமாக அமைந்தது.

முக்கிய இறப்பர் நுகர்வு நாடுகளின் மேம்பட்ட கேள்வியின் காரணமாக 1993 இல் விலை அதிகரிப்பினைக் கொண்டிருந்த அனைத்து இறப்பரினதும் சராசரி (கஏபெ) ஏற்றுமதிவிலை தொடர்ந்து மேல்நோக்கிச் சென்று 1993 இன் கிலோக்கிறாம் ஒன்று ரூ. 44.34 இலிருந்து 1994 இல் கிலோக்கிறாம் ஒன்று ரூ. 51,81 இற்கு 17 சதவீதத்தினால் அதிகரித்தது. 1994 இல் கொழும்பு ஏலங்களில் ஆர்எஸ்எஸ் 1 இன் ஆண்டுச் சராசரி விலை 42 சதவீதத்தினால் கிலோக்கிறாம் ஒன்று ரூ. 50.48 இற்கு அதிகரித்த வேளையில் ஆர்எஸ்எஸ் 2 இன் சராசரி விலை 47 சதவீதத்தினால் கிலோக்கிறாம் ஒன்று ரூ. 49.57 இற்கு அதிகரித்தது. இதேவேளையில் சிறுஉடைமையாளர்களையும் உள்ளடக்கிய தனியார் துறையின் உற்பத்திச் செலவு 1994 இல் 8 சதவீதத்தினால் கிலோக்கிறாம் ஒன்று ரூ. 24.90 இற்கு அதிகரித்தது. எனினும் உயர்ந்த உற்பத்தியாளர் விலைகளின் சூழலில் 1994 இல் இத்துறை அதிகரித்த உற்பத்தியாளர் இலாபங்களைப் பெற்றுக்கொண்டது.

இறப்பரைஅடிப்படையாகக் கொண்ட தயாரிப்புத் துறையின் அதிகரித்த நடவடிக்கைகளின் தாக்கத்தின் கீழ் 1985 இலிருந்து உறுதியாக அதிகரித்துவந்த இறப்பரின் உள்நாட்டு நுகர்வு 1994 இல் மேலும் 3 சதவீதத்தினால் 340 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கான அதிகரிப்பைப் பதிவுசெய்து இவ்வாண்டின் மொத்த உற்பத்தியில் 32 சதவீதத்திற்கு வகைகூறியது.

1994 இல் 26,100 இலட்சம் காய்கள் என மதிப்பிடப்பட்டுள்ள தெங்கு உற்பத்தி 1986 இலிருந்து பதிவுசெய்யப்பட்டதில் அதியுயர்ந்த உற்பத்தி மட்டமாகும். 1994 இல் காய்களின் உற்பத்தியில் ஏற்பட்ட 21 சதவீதத்தினாலான அதிகரிப்பானது, 1993 இல் நிலவிய சாதகமான வானிலைத் தன்மைகளின் காலங்கடந்த தாக்கத்தின் பிரதிபலிப்பாகும். அதிகரித்த காய் உற்பத்தியினைத் தொடர்ந்து தேங்காய்த் துருவல் உற்பத்திக்குச் சமமான காய்களின் எண்ணிக்கை 41 சதவீதத்தினால் அதிகரித்து 3,800 இலட்சம் காய்களை எய்தியது. 1990 இன் பின்னர் வீழ்ச்சியுறும் போக்கினைக் கொண்டிருந்த தேங்காய் எண்ணெய் உற்பத்திக்குச் சமமான காய்களின் எண்ணிக்கை 1994 இல் கிட்டத்தட்ட மும்மடங்கு அதிகரிப்புடன் 4,800 இலட்சம் காய்களுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. உலர்த்திய தேங்காய் ஏற்றுமதிகளுக்கும் உடன்காய்களின் ஏற்றுமதிகளுக்கும் சமமான காய்களின் எண்ணிக்கையும் முறையே 29 சதவீதத்தினாலும் 18 சதவீதத்தினாலும் 310 இலட்சம் காய்களுக்கும் 260 இலட்சம் காய்களுக்கும் அதிகரித்தன. உள்நாட்டில் காய்களின் நுகர்வு 1 சதவீதத்தினால் 16,870 இலட்சம் காய்களுக்கு அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளதோடு 1994 இன் மொத்த தேங்காய் உற்பத்தியில் 65 சதவீதத்திற்கு வகைகூறியது.

கோப்பி மற்றும் ஏலக்காய் தவிர்ந்த முக்கிய சிறு ஏற்றுமதிப் பயிர்களில் பெரும்பாலானவற்றின் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெரும்பாலும் மாறாது காணப்பட்டது. முன்னைய ஆண்டில் 39 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்த கோப்பி உற்பத்தி 1994 இல் கணிசமாக 83 சதவீதத்தினால் மேம்பாடடைந்து 3,687 மெற்றிக் தொன்களை எய்தியது. கோப்பி உற்பத்தியின் மேம்பாட்டிற்கு சாதகமான வானிலைத் தன்மைகளும் 1994 இல் அதிகரித்த வளமாக்கிப் பாவனையுமே காரணமாயின. 1993 இல் 30 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த ஏலக்காய் உற்பத்தி 1994 இல் 33 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்து 40 மெற்றிக் தொன்களை எய்தியது. கறுவாச் சுருள்களின் வெளியீடு 9,696 மெற்றிக்தொன்களுக்கு 2 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தவேளையில் கொக்கோவின் வெளியீடும் சிறிதளவால் 1,463 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. கராம்பு மற்றும் சாதிக்காய் என்பனவற்றின் வெளியீடு 1993 இன் மட்டத்திலேயே மாறாது காணப்பட்டது. 1993 இல் உச்ச உற்பத்தியைப் பதிவுசெய்த மிளகு 1994 இல் வெளியீட்டில் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்து 4,964 மெற்றிக் தொன்களாக விளங்கியது.

1994 இல் 26.8 இலட்சம் மெற்றிக் தொன்கள் (1,290 இலட்சம் புசல்கள்) என மதிப்பிடப்பட்டுள்ள நெல் உற்பத்தி முன்னைய ஆண்டின் உற்பத்தியினைவிட 4.4 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. இதுவரை காலமும் பதியப்பட்ட ஆகக்கூடிய உற்பத்தியாக இது விளங்கியதோடு 1985 இல் பதிவுசெய்யப்பட்ட உச்ச உற்பத்தியினை 23,000 மெற்றிக் தொன்களினால் (11 இலட்சம் புசல்கள்) விஞ்சியிருந்தது. 1993/94 பெரும் போகத்தில் 16.7 இலட்சம் மெற்றிக் தொன்கள் (800

இலட்சம் புசல்கள்) என மதிப்பிடப்பட்டுள்ள நெல் உற்பத்தி முன்னைய ஆண்டின் பெரும்போக உற்பத்தியினைவிட 1 சதவீதம் குறைவானதாக இருந்தது. சராசரி விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சியே அதற்கான காரணமாகும். 1993 இல் 24 சதவீதத்தினால் அதிகரித்த சிறுபோக நெல் உற்பத்தி 1994 இல் மேலும் 16 சதவீதத்தினால் பத்து இலட்சம் மெற்றிக் தொன்களுக்கு (490 இலட்சம் புசல்கள்) அதிகரித்தது. சராசரி விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சியின் மத்தியிலும் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு, அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு என்பனவற்றின் அதிகரிப்பின் காரணமாக சிறுபோகத்தின் நெல் உற்பத்தி அதிகரித்தது. விரயம் மற்றும் விதை நெல் தேவைப்பாடுகள் என்பனவற்றிற்குச் சீராக்கஞ் செய்யப்பட்ட பின்னர் நெல் உற்பத்திக்குச் சமமான அரிசி 1,606,000 மெற்றிக் தொன்களாக விளங்கியது. இது முன்னைய ஆண்டின் 84 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் மதிப்பிடப்பட்ட ஆண்டு நுகர்வில் 87 சதவீதத்திற்கு வகை கூறியது. அதிகரித்த உற்பத்தியைத் தொடர்ந்து அரிசி இறக்குமதி 1993 இன் 209,000 மெற்றிக் தொன்களிலிருந்து 1994 இல் 58,000 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

1994 இல் 72,275 மெற்றிக் தொன்களாக விளங்கிய சீனி உற்பத்தி இதுவரை பதிவு செய்யப்பட்டதில் மிக உயர்ந்த உற்பத்தியாக விளங்கியதோடு 1993 இன் உற்பத்தியினை விட 5 சதவீத அதிகரிப்பையும் கொண்டிருந்தது. முன்னைய ஆண்டைப்போலவே இங்குரான, செவனகல மற்றும் பெல்வத்தை கரும்புத் தோட்டங்கள் வெளியீட்டின் மேம்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்தன. இங்குரானவின் உற்பத்தி 9 சதவீதத்தினால் 14,058 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. 1993 இல் 17 சதவீதத்தினால் அதிகரித்த செவனகல தொழிற்சாலையின் உற்பத்தி 1994 இல் அதே போன்றதொரு அதிகரிப்பைப் பதிவுசெய்து 18,535 மெற்றிக் தொன்களை எய்தியது. 1994 இல் பெல்வத்தை தொழிற்சாலையின் வெளியீடு சிறிதளவால் 39,682 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில் கந்தளாய் சீனித் தொழிற்சாலையில் எத்தகைய உற்பத்தியும் பதிவுசெய்யப்படவில்லை. ஆலையிடப்பட்ட கரும்பின் அளவு அதிகரித்தமை உற்பத்தியின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது.

1994 இல் சிறு உணவுப் பயிர்கள்துறை கலப்பான செயலாற்றத்தைக் காட்டியது. பெரிய வெங்காய உற்பத்தி இரு மடங்கிற்கும் மேலாக 81,000 மெற்றிக் தொன்கள் வரையிலான உற்பத்தியைப் பதிவு செய்தவேளையில் சோயா அவரை, நிலக்கடலை, குரக்கன் என்பனவற்றின் உற்பத்தி முறையே 46 சதவீதத்தினாலும் 33 சதவீதத்தினாலும் 9 சதவீதத்தினாலும் அதிகரித்தது. பெரிய வெங்காயம், சோயா அவரை, நிலக்கடலை என்பனவற்றின் உற்பத்தியின் கணிசமான அதிகரிப்பானது இப்பயிர்களின் கீழ் பயிரிடப்பட்ட நிலப்பரப்பின் அதிகரிப்புக் காரணமாக ஏற்பட்டதாகும். இதே வேளையில் மிளகாய், உருளைக்கிழங்கு சின்னவெங்காயம், பயறு, உழுந்து, தட்டைப்பயறு, எள்ளு, சோளம் போன்ற ஏனைய சிறு உணவுப் பயிர்கள் 1994 இல் குறைந்த உற்பத்தியினைப் பதிவு செய்தன.

1994 இல் 224,000 மெற்றிக் தொன்கள் என மதிப்பிடப்பட்ட மீன் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1 சதவீத அதிகரிப்பாகும். மொத்த மீன் உற்பத்தியில் 78 சதவீதத்திற்கு வகைகூறிய கரையோர மீன்பிடித்துணைத்துறை 1993 இன் 169,900 மெற்றிக் தொன்களிலிருந்து 1994 இல் 174,500 மெற்றிக் தொன்களுக்கு

3 சதவீதத்தினால் அதிகரித்தது. கரைகடந்த மற்றும் ஆழ்கடல் மீன்பிடித் துணைத்துறையின் உற்பத்தி 14 சதவீதத்தினால் 37,500 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. மாறாக உள்ளூர் மீன்பிடித் துணைத்துறையின் உற்பத்தி 33 சதவீதத்தினால் 12,000 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்து 1989 இல் பதிவு செய்யப்பட்ட 19 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் மொத்த மீன் உற்பத்தியில் 5 சதவீதத்திற்கு மட்டுமே வகைகூறியது.

## கைத்தொழில்

சில வகையான ஆடைகளில் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கான அனுமதிப்பங்குகளின் கிடைப்பனவு தொடர்பான நிச்சயமற்ற தன்மை, ஆண்டின் இறுதிப்பாகத்தில் கைத்தொழில் நடவடிக்கைகளில் காணப்பட்ட தடங்கல்கள், தேசிய தேர்தல்களின் மத்தியில் சாதகமற்ற பேரண்டப் பொருளாதாரச் சூழல் என்பனவற்றின் தாக்கத்தின்கீழ் 1994 இல் கைத்தொழில் துறையின் விரிவாக்கம் மிதமாகக் காணப்பட்டது. உண்மை நியதிகளில் கைத்தொழில் வெளியீட்டின் பெறுமதி முன்னைய ஆண்டின் 14 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 9 சதவீதத்தினால் அதிகரித்தது. தனியார் துறைக் கைத்தொழில் வெளியீடு 11 சதவீத வளர்ச்சியை உருவாக்கி 1994 இல் 5 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்த அரசதுறைக் கைத்தொழில் வளர்ச்சியினை தொடர்ந்தும் விஞ்சிக் காணப்பட்டது.

1993 இல் உண்மை நியதிகளில் 13 சதவீதத்தினால் அதிகரித்த தனியார்துறைக் கைத்தொழில்களின் உற்பத்திப் பெறுமதி 1994 இல் 11 சதவீதத்தினால் அதிகரித்தது. தனியார்துறையிலிருந்தே முழுமையாக உருவாகிய புடவை அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் துணைத்துறை முன்னைய ஆண்டின் 17 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1994 இல் 6 சதவீதத்தினால் அதிகரித்தது. அனுமதிப் பங்கின் கிடைக்கத்தக்க தன்மை தொடர்பாக பொருத்தமான மதிப்பீடு எதுவுமின்றி அணியும் ஆடைகள்துறையில் உருவாக்கப்பட்ட மிகைத்த இயலளவு 1994 இல் இத்துறையின் செயலாற்றத்தில் பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. ஏற்றுமதிசார்ந்த கைத்தொழில்களினால் பெறப்பட்ட தாழ்ந்த விலைகளும் முக்கிய புடவை மற்றும் அணியும் ஆடை தொழில் முயற்சிகளில் சிலவற்றில் நிலவிய தொழில் பிணக்குகளும் அணியும் ஆடைகள் துறையின் வெளியீட்டின் பெறுமதி குறைவடைய பங்களிப்புச் செய்தன. தோல் உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள முதலீட்டுச்சபை தொழில் முயற்சிகளின் மேம்பட்ட செயலாற்றத்தின் முதன்மைக் காரணத்தினால் இவ்வாண்டில் தோல் உற்பத்திப் பொருட்களின் வெளியீட்டில் கணிசமான அதிகரிப்புக் காணப்பட்டது. தனியார்துறைக் கைத்தொழில் வெளியீட்டில் கிட்டத்தட்ட 26 சதவீதத்தினைக் கொண்ட உணவு, குடிபானம், புகையிலை வகை 1994 இல் 8 சதவீதத்தினால் அதிகரித்து பண்ணை உற்பத்திப் பொருட்கள், விசுக்கோத்துக்கள், இனிப்புப் பொருட்கள், மா, பழ வர்க்கங்கள், மரக்கறி வகைகள் இறைச்சி உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் பதனிடல் என்பனவற்றின் மேம்பட்ட உற்பத்தியினைப் பெருமளவில் பிரதிபலித்தன. மாறாக தொழில் பிணக்குகள், உள்நாட்டுக் கேள்வியின் வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக 1994 இல், உணவு குடிபானம் வகையில் அதியுயர் பங்களிப்பினைக்கொண்ட புகையிலையின் உற்பத்தி சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தது. முக்கிய தயாரிப்புத் தொழில் முயற்சிகளில் காணப்பட்ட தொழிலாளர் அமைதியின்மையின் முதன்மைக் காரணத்தினால் கோழித்தீன் உற்பத்தி வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

Central Bank of Sri Lanka
22693
11 JUN 2009
Library & Information Centre
Communications Department



இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் வகையின் தனியார் கைத்தொழில்களின் வெளியீடு 1994 இல் இத்துணைத்துறையின் மொத்த வெளியீட்டின் அரைப்பங்கிற்கும் மேலான அளவிற்கு வகை கூறியது. விவசாய, இரசாயனப் பொருட்கள், மருந்தாக்கல் பொருட்கள், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள், சவர்க்காரம் மற்றும் குளியலறைப் பாவனைப் பொருட்கள் என்பனவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தனியார்துறைக் கைத்தொழில்கள் அதிகரித்த உற்பத்திகளைப் பதிவுசெய்தன. கைத்தொழில் மற்றும் அறுவைச் சிகிச்சை கையுறைகள் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் என்பனவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள ஏற்றுமதி சார்ந்த முதலீட்டுச்சபைக் கைத்தொழில்கள் 1994 இல் மேம்பட்ட செயலாற்றத்தைப் பதிவு செய்தன.

உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப்பொருட்கள் துணைத்துறையின் மொத்த வெளியீட்டில் கிட்டத்தட்ட ஐந்தில் நான்கு பங்கிற்கு வகைகூறும் தனியார்துறைக் கைத்தொழில்கள் 1994 இல் தொடர்ந்தும் விரிவடைந்தன. சீமெந்து, கண்ணாடி மற்றும் கண்ணாடி உற்பத்திப் பொருட்கள், கல்நார்த்தகடு என்பனவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தனியார்துறைக் கைத்தொழில்களில் அதிகரித்த வெளியீட்டு மட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. இவ்வாண்டில் கட்டுமான நடவடிக்கையின் மேம்பட்ட மட்டமே இதற்கான காரணமாக அமைந்தது. எனினும் தொழிலாளர் அமைதியின்மையின் காரணமாக 1994 இல் மட்பாண்ட உற்பத்திப் பொருட்களின் வெளியீடு வீழ்ச்சியடைந்தது. சுண்ணப்பாறை உற்பத்திப் பொருட்கள், பீங்கான் வகைகள், கருங்கல் பாளங்கள் என்பனவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள ஏற்றுமதி சார்ந்த முதலீட்டுச்சபைக் கைத்தொழில்கள் வெளியீட்டில் மேம்பட்ட செயலாற்றத்தைக் காட்டின.

தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் துணைத்துறையில், தனியார்துறைக் கைத்தொழில்கள் 1994 இன் வெளியீட்டில் 16 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தன. இவ்வதிகரிப்பானது பெரும்பாலும் அச்சிடல், தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பு, சுட்டுத்துண்டுகள் மற்றும் பொதியிடல் பொருட்களின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்களில் இருந்தே பெறப்பட்டது. முன்னைய ஆண்டில் நலிவுற்ற செயலாற்றத்தைக்காட்டிய உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள் துணைத்துறையின் வெளியீடு 1994 இல் கணிசமான 14 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. உருவமைக்கப்பட்ட உலோகம், மின் உபகரணங்கள், மின்கலங்கள், கம்பிகள், மின் குமிழ்கள் என்பனவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தனியார்துறைக் கைத்தொழில்களின் மேம்பட்ட செயலாற்றமே இதற்கான காரணமாகும். பேருந்துகள், சரக்கு வண்டிகள் என்பனவற்றின் பக்கச் சட்டங்களின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தனியார்துறைக் கைத்தொழில்களில் அதிகரித்த வெளியீடு பதிவு செய்யப்பட்டது.

உண்மை நியதிகளில் அரசதுறைக் கைத்தொழில்கள் முன்னைய ஆண்டின் 20 சதவீத அதிகரிப்புக்கு மாறாக 1994 இல் 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 1993 திசெம்பரில் சீமெந்து மற்றும் மட்பாண்ட உற்பத்தி அலகுகளின் உடைமை அரசதுறையிலிருந்து தனியார்துறைக்கு மாற்றல் செய்யப்பட்டமையின் காரணமாக உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப்பொருட்கள் வகையின் வெளியீட்டில்

காணப்பட்ட கடுமையான வீழ்ச்சியே இதற்கான முதன்மைக் காரணியாக அமைந்தது. மொத்த அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் 78 சதவீதத்திற்கு வகைகூறும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 1994 இன் வெளியீட்டில் 4 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. பெற்றோலியம் நீக்கப்படுமிடத்து அரசதுறைக் கைத்தொழில் வெளியீடு 33 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**விலைகள்**

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் நியதிகளில் அளவிடப்பட்டவாறு விலைகளின் பொதுமட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதம் 1993 இன் 11.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் 8.4 சதவீதமாக இருந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் உணவு, ஆடைகள் எரிபொருளும் வெளிச்சமும் மற்றும் பல்வகை விடயங்களின் அதிகரிப்பு 1993 இனைவிட 1994 இல் குறைவான வீதத்தில் காணப்பட்டது. நிருவகிக்கப்பட்ட விலைகளின் குறைப்பானது உணவுத் துணைத்துறையின் விலை அதிகரிப்பு வீதத்தை ஒற்றை இலக்க மட்டத்திற்கு குறைவடையச் செய்வதற்கு பெருமளவு பங்களிப்புச் செய்தது. பாண், கோதுமைமா என்பனவற்றின் விலைகள் ஆண்டின் பின்னரைப்பகுதியில் குறைக்கப்பட்டுள்ளவேளையில் பருப்பு, சீனி, கருவாடு போன்ற சில நுகர்வுப் பொருட்களின் இறக்குமதித்தீர்வை நீக்கப்பட்டது; அல்லது குறைக்கப்பட்டது. மண்ணெண்ணெய், டீசல் என்பனவற்றின் விலைகளிலும் கீழ்நோக்கிய திருத்தம் ஒன்று காணப்பட்டது. இவ்வாறான விலை மற்றும் தீர்வைக் குறைப்புக்கள், அரிசி விலை அதிகரிப்பின் மிதமான தன்மையுடனும் மிளகாய், தேங்காய் என்பனவற்றின் விலை வீழ்ச்சியுடனும் ஆடைகள் மற்றும் பல்வகைப் பொருட்களின் குறைந்த அதிகரிப்புடனும் இணைந்து இவ்வாண்டில் பணவீக்க வீதத்தினைக் குறைவடையச் செய்ய உதவின. எனினும் விரிந்த பணநிரம்பலின் 19.6 சதவீத அதிகரிப்பைத் தொடர்ந்து பொது விலை மட்டத்தின் மீதான கேள்வித்தாக்கம் தடைப்படாது தொடர்ந்தும் காணப்பட்டது.

1993 இனைப் போலவே 1994 இலும் கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணைவிட மிகத் தாழ்ந்த அதிகரிப்பையே காட்டியது. சுட்டெண்ணின் ஆண்டுச்சராசரி அதிகரிப்பு 1993 இன் 8.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் 4.8 சதவீதமாக அமைந்தது. கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின்படி உணவு விலைகள் முன்னைய ஆண்டின் 8.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 4.0 சதவீதத்தினால் அதிகரித்தது. கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் எரிபொருள் வெளிச்ச வகையின் விலைகள் முன்னைய ஆண்டின் அதிகரிப்பைப் போன்றே 17.0 சதவீதத்தினால் அதிகரித்தன. ஆடைகள் மற்றும் காலணிகள் வகையில் விலைகளின் அதிகரிப்பு 3.9 சதவீதமாக அமைந்து 1993 இல் பதிவுசெய்யப்பட்ட 8.2 சதவீதத்தினைவிட கணிசமான அளவு தாழ்ந்து காணப்பட்டது. வெறியக் குடிவகைகள், புகையிலை, வெற்றிலையும் பாக்கும், தனியாள் கவனிப்பு, நலப்பணிகள், வீட்டுத்துறைப் பொருட்களும் பணிகளும், போக்குவரத்தும் தொடர்புப் பணிகளும் ஆகிய வகைகளின் விலை அதிகரிப்புக்கள் முறையே 8.2 சதவீதமாகவும் 6.7 சதவீதமாகவும் 0.5 சதவீதமாகவும் விளங்கி முன்னைய ஆண்டில் இவ்வகைகளில் காணப்பட்ட அதிகரிப்புக்களைவிட குறைவானதாகவே காணப்பட்டன.

முதலாந்தரச் சந்தை மட்டத்தில் விலை அசைவுகளை அளவிடும் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் 1993 இன் 7.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் 5.0 சதவீதத்தினால் அதிகரித்தது. முக்கிய ஏற்றுமதிப் பண்டங்களான தேயிலை, தெங்கு என்பனவற்றின் விலைகளின் வீழ்ச்சியானது இவ்வாண்டில் விலை அதிகரிப்பு வீதத்தின் மெதுவான தன்மைக்குப் பெருமளவு பங்களிப்புச் செய்தது. இவ்வாண்டில் உணவுத்துறையின் விலைகள் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தவேளையில் வெறியக் குடிவகைகள், புடவைகள், காலணிகள், இரசாயனம், இரசாயன உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் விலைகளும் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் மெதுவடைந்தன. இவ்வாண்டில் உலோகமல்லா உற்பத்திப் பொருள்கள், எரிபொருளும் வெளிச்சமும், பல்வகை விடயங்கள் போன்ற வகைகளில் கூடிய விலை அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டன.

## கூலிகள்

அரசதுறையில் கூலிகளின் அசைவுகள் அரச துறை ஊழியர்களுக்கான கூலிவீதச் சுட்டெண்களினால் அளவிடப்படுகின்றன. பெயரளவு நியதிகளில் 1994 இல் அனைத்து மத்திய அரச ஊழியர்களுக்குமான கூலிவீதச்சுட்டெண் 8.9 சதவீதத்தினால் அதிகரித்தது. உண்மை நியதிகளில் இந்த வகை ஊழியர்களின் கூலிகள் சிறிதளவான 0.5 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்தன. எனினும் 1993 இல் புதிய சம்பளத்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலைத் தொடர்ந்து பெயரளவுக் கூலிகள் அதிகூடிய 21.1 சதவீதத்தினாலும் உண்மைக் கூலிகள் 8.3 சதவீதத்தினாலும் அதிகரித்தன. 1994 இல் நிறைவேற்றுநர் தரமல்லா அனைத்து அலுவலர்களினதும் பெயரளவுக் கூலிவீதச் சுட்டெண் 11.3 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் உண்மைக்கூலிகள் 2.8 சதவீதத்தினால் அதிகரித்தன. 1994 ஒகத்தில் எழுதுவினைஞர் மற்றும் அதனோடு தொடர்புடைய தரங்களினதும் நடுத்தர மட்ட தொழில் நுட்பப் பணியாளர்களினதும் சம்பள முரண்பாடுகள் திருத்தப்பட்டமை நிறைவேற்றுதரம் அல்லாதோரின் கூலிகளின் அதிகரிப்புக்கு பொறுப்பாக அமைந்தது. 1994 இல் சிற்றூழியர்களுக்கான கூலிவீதச் சுட்டெண் 6.0 சதவீதத்தினால் அதிகரித்து உண்மைக் கூலிகளில் 2.2 சதவீத வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது. இவ்வாண்டில் அரச பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கான கூலிவீதச்சுட்டெண் 5.0 சதவீதத்தினால் அதிகரித்தது. உண்மை நியதிகளில் இது கூலியில் 3.0 சதவீத வீழ்ச்சியினை எடுத்துக்காட்டியது.

கூலிச்சபைகளுக்கு உட்பட்ட வேலையாட்களுக்கான கூலி அதிகரிப்பு 1993 இன் 16.2 சதவீதத்திலிருந்து 1994 இல் 3.9 சதவீதத்திற்கு குறைவடைந்தது. கூலிச் சபைகளுக்கு உட்பட்ட வேலையாட்களுக்கான உண்மைக் கூலிகள் 1994 இல் 4.2 சதவீதத்தினால் மோசமடைந்த வேளையில் முன்னைய ஆண்டில் உண்மைக் கூலிகள் 4.1 சதவீதத்தினால் மேம்பட்டிருந்தன. 1994 இல் வேளாண்மையில் ஈடுபட்டுள்ள வேலையாட்களின் பெயரளவுக் கூலிகள் 2.2 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்ததுடன் இது உண்மைக் கூலிகள் 5.7 சதவீதத்தினால் மோசமடைந்ததை எடுத்துக் காட்டியது. முன்னைய ஆண்டில் வேளாண்மையில் ஈடுபட்டுள்ள வேலையாட்களின் கூலிகள் பெயரளவு நியதிகளில் 21.1 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்த வேளையில் உண்மைக் கூலிகள் 8.3 சதவீதத்தினால் மேம்பட்டன. அரச

பெருந்தோட்ட வேலையாட்களுக்குச் செலுத்தப்படவேண்டிய வாழ்க்கைச் செலவுப்படி நிறுத்தப்பட்டு 1993 சனவரியிலிருந்து ரூ. 12/- கொண்ட வரவுசெலவுத் திட்டப் படி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அரச பெருந்தோட்ட வேலையாட்களின் கூலிகள் மாறாது காணப்பட்டன. இவ்வாண்டில் பணிகளிலுள்ள வேலையாட்களின் கூலிகள் பெயரளவு நியதிகளில் அதிகூடிய 17.9 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் அவர்களது உண்மைக்கூலிகள் 8.7 சதவீதத்தினால் அதிகரித்தன. கைத்தொழில் மற்றும் வர்த்தகத்திலுள்ள வேலையாட்களின் கூலி அதிகரிப்பு 1994 இல் 5.2 சதவீதமாக அமைந்து முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்பினைவிட உயர்வானதாகக் காணப்பட்டது (3.4 சதவீதம்). மருத்துவ மனைகள், புடவைத் தயாரிப்பு, உந்து ஊர்திகள் போக்குவரத்து, வர்த்தகம் ஆகிய வகைகளின் ஆகக்குறைந்த கூலிகள் 1994 இல் மேல் நோக்கித் திருத்தப்பட்டன.

1994 இல் நன்கமையாத துறையில் அனைத்து நடவடிக்கைகளினதும் பெயரளவுக் கூலிகள் அதிகரித்தன. நெற்பயிர்ச் செய்கையில் வளர்ச்சி வீதங்கள் 8 இலிருந்து 17 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டன. நெற் பயிர்ச் செய்கையின் அனைத்து நடவடிக்கைகளிலும் உண்மைக் கூலிகள் மேம்பாடடைந்தன. தெங்குப் பயிர்ச் செய்கையில் பெயரளவுக் கூலிகள் கணிசமாக அதிகரித்து உண்மைக் கூலிகளில் மேம்பாட்டினை விளைவித்தன. ஒப்பிடுகையில் தேயிலை மற்றும் இறப்பர் பயிர்ச் செய்கையில் கூலிகளின் அதிகரிப்பு சார்புரீதியில் மெதுவானதாக அமைந்து பல நடவடிக்கைகளில் உண்மைக் கூலிகள் மோசமடைந்தன. கட்டட நிருமாண நடவடிக்கைகளில் அனைத்துத் தொழிலாளர் வகைகளுக்குமான பெயரளவுக் கூலிகள் 10 சதவீதத்திற்கும் 11 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் அதிகரித்தன.

## தொழில் நிலை

இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்படும் ஆண்டுத்தொழில் நிலை அளவீட்டின்படி அரசு மற்றும் அரசுசார் துறைகளை உள்ளடக்கிய அரசதுறையின் மொத்தத் தொழில் நிலை 1994 இறுதியில் மிதமாக 2 சதவீதத்தினால் கிட்டத்தட்ட 13. 2 இலட்சத்திற்கு அதிகரித்தது. மத்திய அரசு, அமைச்சுக்கள், திணைக்களங்கள், மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சிச் சபைகள் என்பனவற்றை உள்ளடக்கிய அரச நிறுவனங்களின் தொழில்நிலை 699,898 என மதிப்பிடப்பட்டுள்ளதோடு 1993 இனைவிட 3.5 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இவ்வதிகரிப்பு வைத்தியர்கள், நலப்பணி, ஆளணிகள் வகையிலும் எழுதுவினைஞர்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய தொழிலாளர் வகையிலும் பெருமளவில் பிரதிபலிக்கப்பட்டதோடு முன்னைய ஆண்டைவிட முறையே 8 சதவீத, 6 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தன. முக்கியமாக பாதுகாப்பு ஆளணிகளை உள்ளடக்கிய பணிகள் தொழிலாளர்வகை 4 சதவீதத்தினால் அதிகரித்தது. அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள், அரசுடைமையாக்கப்பட்ட வியாபார முயற்சிகள் அரச வங்கிகள் என்பனவற்றினை உள்ளடக்கிய அரசுசார்துறைத் தொழில்நிலை 1994 இல் சிறிதளவான 1 சதவீதத்தினால் அதிகரித்து எழுதுவினைஞர், தொழில்சார் மற்றும் தொழில் நுட்ப வகைகளில் இவ்வதிகரிப்புக்களைப் பிரதிபலித்தது.

1994 இறுதியில் இலங்கை முதலீட்டுச் சபை 134,572 ஆட்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கி 1993 இனைவிட 10 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இத்தொழில் முயற்சிகளின் தொழில் வாய்ப்பில் கிட்டத்தட்ட 43 சதவீதமானவை கட்டுநாயக்கா—ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தில் காணப்பட்டது. பியகம, கொக்கல ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்கள் முறையே 16 சதவீத, 4 சதவீத தொழில் வாய்ப்புக்களை வழங்கின.

## வர்த்தகமும் சென்மதி நிலுவையும்

1994 இல் பலதரப்பட்ட பாதகமான நிலைமைகளின் காரணமாக வெளிநாட்டு வர்த்தகத்துறை பாதிக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கான சில புடவை வகைகளின் அனுமதிப் பங்கின் கிடைக்கத்தக்க தன்மையில் காணப்பட்ட நிச்சயமற்ற நிலமைகள், கைத்தொழில் நடவடிக்கைகளில் காணப்பட்ட தடங்கல்கள், பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மோசமடைந்தமை, பொருளாதாரத்தின் அதி உயர் கேள்வி அழுத்தங்கள் என்பனவற்றின் தாக்கத்தின்கீழ் ஏற்றுமதி வளர்ச்சி 1993 இன் 17 சதவீதத்திலிருந்து 1994இல் 9 சதவீதத்திற்கு மிதமடைந்தவேளையில் இறக்குமதிகள் 16 சதவீதத்தினால் அதிகரித்தன. வெளிநாட்டு வர்த்தக மாற்று விகிதம் 1993 இன் 2.0 சதவீத மேம்பாட்டிற்கு மாறாக 1994 இல் 4.7 சதவீதம் வீழ்ச்சியடைந்து ஏற்றுமதிப் பெறுமதியின் மெதுவான வளர்ச்சிக்கும் இறக்குமதிகளின் அதிகரித்த வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்தது. இந்த வெளிப்பாடுகள் வர்த்தகப் பற்றாக்குறையினை 1993 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 11 சதவீதத்திலிருந்து 1994 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 13 சதவீதத்திற்கு அதிகரிக்கச் செய்தது.

1993 இன் 2,180 இலட்சம் கிலோக்கிறாம்களிலிருந்து 2,300 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு தேயிலை ஏற்றுமதித் தொகையில் காணப்பட்ட அதிகரிப்பின் மத்தியிலும் தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதி 1993 இன் சிஎஉ 2,950 இலட்சத்திலிருந்து (ரூ. 199,110 இலட்சம்) 1994 இல் சிஎஉ 2,960 இலட்சத்திற்கு (ரூ. 209,640 இலட்சம்) சிறிதளவால் மட்டுமே அதிகரித்தது. இது 1994 இல் சராசரி ஏற்றுமதி விலை 4 சதவீதத்தினால் கிலோக்கிறாம் ஒன்று சிஎஉ 1.29 இற்கு (கிலோக்கிறாம் ஒன்று ரூ. 91.32) வீழ்ச்சியடைந்தமையின் விளைவாகும். எனினும் இறப்பர் ஏற்றுமதிகளின் தொகை 690 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு சிறிதளவு வீழ்ச்சியடைந்தமையின் மத்தியிலும் இறப்பர் ஏற்றுமதிகளின் பெறுமதி 1994 இல் 11 சதவீதத்தினால் சிஎஉ 510 இலட்சத்திற்கு (ரூ. 35,820 இலட்சம்) அதிகரித்தது. இயற்கை இறப்பருக்கான பன்னாட்டு விலைகள் சாதகமாக மாறியதைத் தொடர்ந்து சராசரி ஏற்றுமதி விலை 11 சதவீதத்தினால் கிலோக்கிறாம் ஒன்று சிஎஉ 0.73 இற்கு (கிலோக்கிறாம் ஒன்று ரூ. 51.81) அதிகரித்தமையே அதற்கான காரணமாகும்.

தெங்கு உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் 1993 இன் சிஎஉ 410 இலட்சத்திலிருந்து (ரூ. 27,960 இலட்சம்) 1994 இல் சிஎஉ 530 இலட்சத்திற்கு (ரூ. 37,610 இலட்சம்) 29 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் ஏற்றுமதிகளின் தொகை 1993 இன் 2,930 இலட்சம் காய்களுக்குச் சமமான தொகையிலிருந்து 1994 இல் 4,360 இலட்சம் காய்களுக்கு சமமான தொகைக்கு 49 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்ததைப் பிரதிபலித்தது. எனினும்

உலகளாவிய வழங்கல் மேம்பாடடைந்ததைத் தொடர்ந்து காயொன்றுக்கான சராசரி ஏற்றுமதி விலை 11 சதவீதத்தினால் 1993 இல் காயொன்று சிஎஉ 0.09 இலிருந்து 1994 இல் காயொன்று சிஎஉ 0.08 இற்கு வீழ்ச்சியடைந்தது. தென்னந்தும்பு மற்றும் தும்புக்கயிறு என்பனவற்றையும் உள்ளடக்கிய தெங்கு துணை உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிப் பெறுமதி 1994 இல் 29 சதவீதத்தினால் அதிகரித்தது.

சிறு வேளாண்மை ஏற்றுமதிகளின் பெறுமதி 1993 இன் சிஎஉ 860 இலட்சத்திலிருந்து (ரூ. 58,250 இலட்சம்) 1994 இல் சிஎஉ 900 இலட்சத்திற்கு (ரூ. 63,850 இலட்சம்) அதிகரித்தது. ஏற்றுமதித்துறையின் 57 சதவீத அதிகரிப்பின் மத்தியிலும் வருவாய்கள் 5 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்தன. 1994 இல் சிறு வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் சராசரி ஏற்றுமதி விலை 33 சதவீத கடுமையான வீழ்ச்சியைப் பதிவு செய்தமையே இதற்கான காரணமாகும்.

1994 இல் கைத்தொழில் ஏற்றுமதியின் பெறுமதி சிஎஉ 16,460 இலட்சமாக விளங்கி (ரூ. 1,167,440 இலட்சம்) 1993 இன் சிஎஉ 14,870 இலட்சத்தினைவிட (ரூ. 1,004,200 இலட்சம்) 11 சதவீதம் அதிகரித்தது. 1993 இல் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 20 சதவீதத்தினால் அதிகரித்தது. புடவை மற்றும் அணியும் ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய் 7 சதவீதத்தினால் 1993 இன் சிஎஉ 10,090 இலட்சத்திலிருந்து (ரூ. 681,500 இலட்சம்) 1994 இல் சிஎஉ 10,800 இலட்சத்திற்கு (ரூ. 766,140 இலட்சம்) அதிகரித்தது. 1993 இன் 17 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் புடவைகள் மற்றும் அணியும் ஆடைகளின் வருவாய் அதிகரிப்பின் மெதுவான தன்மையானது 1994 இன் பிற்பகுதியில் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கான புடவை அனுமதிப் பங்கு தொடர்பான நிச்சயமற்ற தன்மையினையும் அணியும் ஆடை ஏற்றுமதிகளின் உள்ளடக்கத்தில் பெறுமதி குறைந்த விடயங்களின் பங்கு அதிகரித்தமையினையும் ஓரளவு பிரதிபலித்தது.

அதிகூடிய உள்நாட்டு கூட்டிய பெறுமதியைக் கொண்ட ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் 1994 இல் 21 சதவீதத்தினால் சிஎஉ 5,100 இலட்சத்திற்கு (ரூ. 361,710 இலட்சம்) அதிகரித்தன. இந்த வகையில் ஆபரணங்கள் (96 சதவீதம்) தோல், இறப்பர், தாள், மரம் மற்றும் மட்பாண்டங்கள் (33 சதவீதம்) உணவு, குடிபானம், புகையிலை (29 சதவீதம்) பொறிகள், இயந்திரவியல் மற்றும் மின் உபகரணங்கள் (19 சதவீதம்) என்பனவற்றில் கணிசமான அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. பெற்றோலிய உற்பத்திப் பொருட்களினதும் வைரக் கற்களினதும் ஏற்றுமதிகளின் பெறுமதி பெரும்பாலும் 1993 இன் அதே மட்டத்தில் மாறாது காணப்பட்டது. கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 1993 இன் சிஎஉ 540 இலட்சத்திலிருந்து (ரூ. 36,530 இலட்சம்) 1994 இல் சிஎஉ 600 இலட்சத்திற்கு (ரூ. 42,930 இலட்சம்) 11 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. இரத்தினக்கற்களின் ஏற்றுமதி 10 சதவீதத்தினால் 1993 இன் சிஎஉ 500 இலட்சத்திலிருந்து (ரூ. 34,020 இலட்சம்) 1994 இல் சிஎஉ 550 இலட்சத்திற்கு (ரூ. 39,170 இலட்சம்) அதிகரித்தமையே இதற்கான பெருமளவு காரணமாக அமைந்தது. இல்மனைற்று, உலோகக் கலவைகள், இரும்புக் கலவைகள் என்பனவற்றின் ஏற்றுமதிகளின் அதிகரிப்புக்காரணமாக ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் சிஎஉ 40 இலட்சத்திலிருந்து (ரூ. 2,510 இலட்சம்) சிஎஉ 50 இலட்சத்திற்கு (ரூ. 3,750 இலட்சம்) அதிகரித்தன.

இறக்குமதிகளின் மீதான மொத்தச் செலவினம் 16 சதவீதத்தினால் 1993 இன் சிஎஉ 2,870 இலட்சத்திலிருந்து (ரூ. 1,935,500 இலட்சம்) 1994 இல் சிஎஉ 33,280 இலட்சத்திற்கு (ரூ. 2,360,300 இலட்சம்) அதிகரித்து இறக்குமதிகளின் அனைத்து முக்கிய வகைகளினதும் அதிகரிப்புக்களைப் பிரதிபலித்தது.

பொருளாதாரத்தில் அதிஉயர் கேள்வி அழுத்தத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளின் மீதான செலவு 17 சதவீதத்தினால் 1993 இன் சிஎஉ 5,550 இலட்சத்திலிருந்து (ரூ. 373,720 இலட்சம்) 1994 இல் சிஎஉ 6,500 இலட்சத்திற்கு (ரூ. 459,830 இலட்சம்) கடுமையாக அதிகரித்தது. 21 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த நீடித்த நுகர்வுப் பொருட்களின் மீதான செலவினமே நுகர்வுப் பொருட்களின் அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்த முதன்மைக் காரணியாக அமைந்தது. நீடித்த நுகர்வுப் பொருட்களின் வகையில் உந்து ஊர்திகளும் ஈருருளிகளும் (79 சதவீதம்) வானொலிக் கருவிகளும் தொலைக்காட்சிப் பெட்டிகளும் (10 சதவீதம்) ஆகியவற்றில் உயர் வளர்ச்சி வீதங்கள் பதிவு செய்யப்பட்டன. உணவு குடிபானம் மீதான இறக்குமதிச் செலவும் 13 சதவீதத்தினால் அதிகரித்தது.

உயர்ந்த பொருளாதார நடவடிக்கைகளினால் உந்தப்பட்டு, 1994 இல் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகளின் மீதான செலவு 10 சதவீதத்தினால் சிஎஉ 16,940 இலட்சத்திற்கு (ரூ. 1,199,700 இலட்சம்) அதிகரித்தது. புடவைகள் ஆடைகள் வகையில் 1993 இன் சிஎஉ 6,170 இலட்சத்திலிருந்து (ரூ. 417,400 இலட்சம்) 1994 இல் சிஎஉ 7,240 இலட்சத்திற்கு (ரூ. 512,990 இலட்சம்) 17 சதவீத அதிகரிப்பும் வளமாக்கியில் சிஎஉ 460 இலட்சத்திலிருந்து (ரூ. 31,080 இலட்சம்) சிஎஉ 560 இலட்சத்திற்கு (ரூ. 38,850 இலட்சம்) 21 சதவீத அதிகரிப்பும் பதிவு செய்யப்பட்டன. நிறமூட்டல் தோல் பதனிடல் மற்றும் வண்ணப்பூச்சு உற்பத்திகள் (7 சதவீதம்), இரசாயன மூலங்களும் கலவைகளும் (9 சதவீதம்), ஏனைய இடைநிலைப் பொருட்கள் (12 சதவீதம்), தாள் மற்றும் தாள் அட்டைகள் (13 சதவீதம்) போன்ற ஏனைய கைத்தொழில் மூலப் பொருட்களிலும் அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. இவ்வதிகரிப்புக்களின் தாக்கமானது கோதுமைத் தானியம் மற்றும் பெற்றோலியம் என்பனவற்றில் பதிவு செய்யப்பட்ட முறையே 12 சதவீத, 7 சதவீத வீழ்ச்சிகளினால் ஓரளவு எதிரீடு செய்யப்பட்டது. கோதுமைத் தானியத்தின் இறக்குமதி மீதான செலவினத்தின் வீழ்ச்சியானது 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த இறக்குமதி விலைகள் 7 சதவீதத்தினால் அதிகரித்த இறக்குமதித் தொகையினை மேலதிகமாக எதிரீடு செய்ததன் பிரதிபலிப்பாகும். பெற்றோலிய இறக்குமதி மீதான செலவின் வீழ்ச்சிக்கு மசகெண்ணெயின் சராசரி இறக்குமதி விலை 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையே பெருமளவு காரணமாக அமைந்தது.

முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவு 27 சதவீதத்தினால் 1993 இன் சிஎஉ 7,500 இலட்சத்திலிருந்து (ரூ. 505,080 இலட்சம்) 1994 இல் சிஎஉ 9,490 இலட்சத்திற்கு (ரூ. 675,240 இலட்சம்) அதிகரித்தது. சிஎஉ 1,500 இலட்சம் (ரூ. 112,600 இலட்சம்) பெறுமதியுடைய வானூர்திகள் இரண்டினது இறக்குமதியே இதற்கான பெருமளவு காரணமாக அமைந்தது. இந்தச் சிறப்பு விடயம் நீக்கப்படுமிடத்து முதலீட்டுப் பொருட்களின் மொத்த இறக்குமதி 1994 இல் 16 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. வானூர்திகள் நீக்கப்படுமிடத்து போக்குவரத்துக் கருவிகளின் பெறுமதி 2 சதவீதத்தினால் அதிகரித்தது. இதேவேளையில் பொறிகள்

கருவிகள் மீதான இறக்குமதிச் செலவு 18 சதவீதத்தினால் 1993 இன் சிஎஉ 3,320 இலட்சத்திலிருந்து (ரூ. 223,770 இலட்சம்) 1994 இல் சிஎஉ 3,900 இலட்சத்திற்கு (ரூ. 276,350 இலட்சம்) அதிகரித்து, இந்தவகையின் கீழான இறக்குமதிகளை ஊக்குவிப்பதற்கான தீர்வைக் குறைப்புக்களின் தாக்கத்தினை ஓரளவு பிரதிபலித்தது. இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் கட்டடப்பொருட்கள் 21 சதவீதத்தினால் சிஎஉ 1,380 இலட்சத்திலிருந்து (ரூ. 93,420 இலட்சம்) சிஎஉ 1,680 இலட்சத்திற்கு (ரூ. 118,980 இலட்சம்) அதிகரித்தன. மொத்த முதலீட்டுப் பொருட்களில் 8 சதவீதத்திற்கு வகைகூறிய ஏனைய முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளும் 1994 இல் 40 சதவீதத்தினால் சிஎஉ 780 இலட்சத்திற்கு (ரூ. 55,660 இலட்சம்) அதிகரித்தன.

பணிகள் கணக்கில் பெறுகைகள் 1993 இன் சிஎஉ 5,350 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 6,270 இலட்சத்திற்கு அதிகரித்தவேளையில் கொடுப்பனவுகள் சிஎஉ 5,070 இலட்சத்திலிருந்து சிஎஉ 6,150 இலட்சத்திற்கு அதிகரித்தன. 1993 இல் கொடுப்பனவுகள் மெதுவாக அதிகரித்த செயலாற்றத்திலிருந்து இது பெருமளவு மாறுபட்டதாகக் காணப்பட்டது. இதன்படி, பணிகள் கணக்கின் மிகை 1993 இன் சிஎஉ 280 இலட்சத்திலிருந்து (ரூ. 18,210 இலட்சம்) 1994 இல் சிஎஉ 120 இலட்சத்திற்கு (ரூ. 8,200 இலட்சம்) வீழ்ச்சியடைந்தது. பெறுகைகள் பக்கத்தில், பணிகளின் அனைத்து முக்கிய வகைகளிலும் அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டது. முக்கியமாக துறைமுகம், போக்குவரத்து, காப்புறுதி, பயணம் மற்றும் ஏனைய பணிகளில் இவ்வதிகரிப்புக்கள் காணப்பட்டன. 1982 இல் பதிவுசெய்யப்பட்ட உச்ச மட்டத்தினை விஞ்சும் வகையில் சுற்றுலா வருகைகளும் சுற்றுலாப் பயணி ஒருவரின் நாளொன்றிற்கான சராசரிச் செலவும் அதிகரித்ததைத் தொடர்ந்து பயணம் மீதான பெறுகைகள் 1993 இல் அவதானிக்கப்பட்ட 5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் 10 சதவீதத்தினால் சிஎஉ 1,610 இலட்சத்திற்கு அதிகரித்தன. எனினும் இலங்கையர்களினால் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் அதிகரித்த பயணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் பயணம் மீதான வெளிப்பாய்ச்சல்களிலும் கணிசமான அதிகரிப்புக்கள் காணப்பட்டன. இதன் விளைவாக பயணம் மீதான தேறிய பெறுகைகள் சிஎஉ 600 இலட்சத்திலிருந்து சிஎஉ 430 இலட்சத்திற்கு வீழ்ச்சிடைந்தன.

1994 இல் முதலீட்டு வருவாய் உட்பாய்ச்சல்கள் 27 சதவீதத்தினால் சிஎஉ 1,000 இலட்சத்திற்கு அதிகரித்து, 1993 இன் சிஎஉ 11,940 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 13,730 இலட்சத்திற்கு அதிகரித்த இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துடைமைகளின் அதிகரித்த முதலீட்டு வருவாயினைப் பிரதிபலித்தது. வெளிப்பாய்ச்சல்களைப் பொறுத்தவரையில் வட்டிக் கொடுப்பனவுகள் சிஎஉ 170 இலட்சத்தினால் சிஎஉ 1,610 இலட்சத்திற்கும் இலாபங்களும் பங்கிலாபங்களும் சிஎஉ 280 இலட்சத்தினால் சிஎஉ 510 இலட்சத்திற்கும் அதிகரித்தன. முதலீடுகளின் அதிகரித்த வருவாயின் காரணமாக இலாபங்களினதும் பங்கிலாபங்களினதும் கணிசமான பாகமொன்று இலங்கையிலேயே தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னைய ஆண்டின் அவதானிப்பிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்பட்டது.

மாற்றல்கள் கணக்கில் குறிப்பாக தனியார் மாற்றல்கள் தொடர்பான தேறிய உட்பாய்ச்சல்கள் நாட்டுக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சலின் முக்கிய மூலமாகத் தொடர்ந்து காணப்பட்டது. பொருட்கள், பணிகள், மற்றும் மாற்றல்கள் மீதான மொத்தப் பெறுகைகளில் கிட்டத்தட்ட 14 சதவீதத்திற்கு வகைகூறிய தனியார் மாற்றல்கள் 1993 இன் சிஎஉ 4,540 இலட்சத்திலிருந்து (ரூ. 305,920 இலட்சம்) 1994 இல் சிஎஉ 4,990 இலட்சத்திற்கு (ரூ. 353,450 இலட்சத்திற்கு) அதிகரித்து குறிப்பாக மத்தியகிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்களின் தொடர்ச்சியான அதிகரித்த பணவனுப்பல்களைப் பிரதிபலிப்பதாக இருந்தது. எனினும் தனியார் மாற்றல்களின் உட்பாய்ச்சல்களின் அதிகரிப்பு வீதம் 1993 இன் 17 சதவீதத்திலிருந்து 1994 இல் 10 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1994 இல் உள்நாட்டு வட்டி வீதங்களின் வீழ்ச்சி மற்றும் பன்னாட்டு சந்தைகளில் வட்டிவீத அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக வட்டி உணர்வினைக்கொண்ட மாற்றல்கள் மிதமடைந்தமையினை இதற்கான ஓரளவு காரணமாகக் குறிப்பிடலாம். இதேவேளையில் தனியார் மாற்றல்களின் பேரிலான வெளிப்பாய்ச்சல்கள் 1993 இன் சிஎஉ 520 இலட்சத்திலிருந்து (ரூ. 35,010 இலட்சம்) 1994 இல் சிஎஉ 610 இலட்சத்திற்கு (ரூ. 43,570 இலட்சம்) அதிகரித்தன. இலங்கையிலிருந்து குடியகல்வோரின் சொத்துக்களின் மாற்றல்கள்மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் 1993 இல் தளர்த்தப்பட்டமையின் முழுத்தாக்கமும் 1994 இல் உணரப்பட்டமையே இதற்கான காரணமாகும். அலுவல்சார் மாற்றல்கள் 1993 இன் மட்டமான சிஎஉ 1,150 இலட்சத்தில் மாறாது காணப்பட்டன. தனியார் மற்றும் அலுவல்சார் மாற்றல்களின் இணைந்த விளைவாக மாற்றல் கணக்கின் தேறிய உட்பாய்ச்சல்கள் 1993 இன் சிஎஉ 5,170 இலட்சத்திலிருந்து (ரூ. 348,390 இலட்சம்) 1994 இல் சிஎஉ 5,520 இலட்சத்திற்கு (ரூ. 390,570 இலட்சம்) அதிகரித்தன.

வர்த்தகக்கணக்கு மோசமடைந்தமையையும் கட்புலனாகா நிலுவையின் (பணிகள் மற்றும் தேறிய வெளிநாட்டு மாற்றல்கள்) மிகை சுருக்கமடைந்தமையையும் பிரதிபலிக்கும் வகையில் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை 1993 இன் சிஎஉ 2,810 இலட்சத்திலிருந்து (ரூ. 188,250 இலட்சம்) 1994 இல் சிஎஉ 5,310 இலட்சத்திற்கு (ரூ. 377,670 இலட்சம்) விரிவடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமொன்றாக பற்றாக்குறை 1993 இற்கும் 1994 இற்கும் இடையில் 3.8 சதவீதத்திலிருந்து 6.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. கொடைகள் நீங்கலாக இந்த விகிதம் 1993 இன் 5.3 சதவீதத்திலிருந்து 1994 இல் 7.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. இரண்டு ஆண்டுகளின் தொடர்ச்சியான மேம்பாட்டின் பின்னர் 1994 இல் பொருளாதாரத்தின் அதிகரித்த கேள்வி அழுத்தத்தின் பெருமளவு காரணமாக நடைமுறைக்கணக்கு கடுமையாக மோசமடைந்தமை 1994 இல் சென்மதி நிலுவையில் கவலைக்குரிய வெளிப்பாடாகக் காணப்பட்டது.

1993 இல் காணப்பட்ட மூலதன உட்பாய்ச்சல்களின் அதிகரிப்பினைத் தொடர்ந்து உள்நாட்டு அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலைகளின் நிச்சயமற்ற தன்மைகளைப் பெருமளவு பிரதிபலிக்கும் வகையில் 1994 இல் மூலதனக் கணக்கின் உட்பாய்ச்சல்களில் கணிசமான தணிப்புக் காணப்பட்டது. தேறிய நாணயமல்லா உட்பாய்ச்சல்கள் 1993 இல் பதிவுசெய்யப்பட்ட 61 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் 10 சதவீதத்தினால் மட்டும் சிஎஉ 6,740 இலட்சத்திற்கு அதிகரித்தன. நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் பட்டியலிடப்பட்ட

முதலீடுகள் என்பனவற்றின் பேரிலான தனியார்துறைக்கான உட்பாய்ச்சல்களிலும் அரசுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகள் காணப்பட்டன.

வர்த்தகத் தொழிற்பாட்டில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை 1993 இன் 94 இலிருந்து 1994 இல் 137 இற்கு அதிகரித்தமையை புதிய தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை குறித்துக் காட்டியவாறு முதலீட்டுச் சபையின் கீழான தொழில் முயற்சிகள் தொடர்ந்து விரிவடைந்தபோதும் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் 1993 இன் சிஎஉ 1,340 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 1,110 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. பட்டியலிடப்பட்ட முதலீடுகளின்மீது வெளிநாட்டு மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல்களும் 1993 இன் சிஎஉ 480 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 200 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. உண்மையில் 1994 மாச்சு, ஏப்பிறல் ஆகிய மாதங்களிலும் 1994 இன் இறுதி காலாண்டிலும் கொழும்புப் பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் வதிவற்றோரின் பங்குகளின் விற்பனைகள் கொள்வனவுகளை விஞ்சியிருந்தன. பட்டியலிடப்பட்ட முதலீடுகளின் கணிசமான குறைப்பானது அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணப்பட்ட மேம்பட்ட முதலீட்டுச் சூழலையும் முதலீட்டாளர்களை கவனமான தீர்மானத்துக்கு இட்டுச்சென்ற தேசிய தேர்தலின் கொள்கை தளர்வுகளையும் பிரதிபலிப்பதாக இருந்தது.

வெளிநாட்டு சலுகை அடிப்படையிலான நிதியியல் உதவிகளை பெருமளவு உள்ளடக்கியிருந்த அரசுக்கான தேறிய மூலதன உட்பாய்ச்சல்கள் 1993 இன் சிஎஉ 1,900 இலட்சத்திலிருந்து (ரூபா 125,790 இலட்சம்) 1994 இல் சிஎஉ 1,460 இலட்சத்திற்கு (ரூ. 103,480 இலட்சம்) 23 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தன. சலுகையற்ற கடன்கள் குறைவாக நாடப்பட்டமையினை இது பெருமளவில் பிரதிபலித்தது. அரசுக்கான மொத்த வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்கள் (மொத்தம்) 1993 இன் சிஎஉ 3,340 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 2,830 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தபோதிலும் செயற்றிட்டக் கடன்களின் மீதான பங்களிப்புக்கள் சிஎஉ 1,920 இலட்சத்திலிருந்து சிஎஉ 2,590 இலட்சத்திற்கு அதிகரித்தன.

இந்த வெளிப்பாடுகளுக்கு மாறாக தனியார் நீண்டகால, குறுகியகால மூலதன உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் கணிசமான அளவில் அதிகரித்தன. தனியார் நீண்டகால மூலதன உட்பாய்ச்சல்கள் 1994 இல் சிஎஉ 640 இலட்சத்தினால் சிஎஉ 2,810 இலட்சத்திற்கு அதிகரித்தன. ஏயர்லங்காவின் மீள் தொகுதியிடல் நிகழ்ச்சித் திட்டத்திற்கான வெளிநாட்டு நிதிவழங்கல், அரசாங்கத்தினால் ஆதரவளிக்கப்பட்ட பேருந்து பொருத்தல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கடன் மூலதனவடிவிலான முதலீட்டுச்சபை செயற்றிட்டங்கள் என்பனவற்றிற்கான பாரிய உட்பாய்ச்சல்களை இது உள்ளடக்கியிருந்தது. தனியார் நீண்டகால மூலதன வெளிப்பாய்ச்சல்கள் 1993 இன் சிஎஉ 830 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 650 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றன.

தனியார் குறுங்கால மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல்கள் 1993 இன் சிஎஉ 1,050 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 1,820 இலட்சங்களுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. 1994 இன் குறுங்கால மூலதன உட்பாய்ச்சல்கள்,

## அட்டவணை 1.3
## சென்மதி நிலுவையின் தொகுப்பு 1991 - 1994

*பத்து இலட்சம் ரூபாய்களில் (சி. எ. உ. பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)*

| விடயம் | 1991 | 1992 | 1993 (அ) | 1994 (ஆ) |
|---|---|---|---|---|
| வணிகப் பொருட்கள் (தேறிய) | -41,252<br>(-726) | 45,785<br>(-740) | -55,486<br>(-825) | -77,644<br>(-1,095) |
| காரணியல்லாப் பணிகள் (தேறிய) | 3,594<br>(65) | 6,391<br>(104) | 7,800<br>(116) | 8,848<br>(125) |
| காரணிப் பணிகள் (தேறிய) | -7,367<br>(-130) | 7,821<br>(-127) | -5,979<br>(-88) | -8,028<br>(-113) |
| தனியார் மாற்றல்கள் (தேறிய) | 16,623<br>(293) | 20,253<br>(328) | 27,090<br>(402) | 30,989<br>(438) |
| அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | 8,407<br>(148) | 8,027<br>(130) | 7,749<br>(115) | 8,069<br>(115) |
| நடைமுறைக் [illegible] | -19,995<br>(-352) | -18,935<br>(-306) | 18,825<br>(-281) | -37,767<br>(-531) |
| மொத்த நிலுவை | 10,140<br>(152) | 9,469<br>(133) | 24,149<br>(375) | 17,166<br>(173) |

**சில முக்கிய குறிகாட்டிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| வர்த்தக மாற்று விகிதம் (1985 = 100) | 85.7 | 89.1 | 90.9 | 86.6 |
| தேறிய பெற்றோலிய இறக்குமதிகள் | 9,598<br>(170) | 11,167<br>(180) | 11,119<br>(165) | 10,682<br>(151) |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்குக்குறை | -5.4 | -4.5 | -3.8 | -6.5 |
| மொத்த பன்னாட்டு ஒதுக்கு | 49,223<br>(809) | 66,236<br>(1,047) | 105,258<br>(1,544) | 130,340<br>(1,792) |
| பன்னாட்டு ஒதுக்குகள் - மாதங்களுக்கான நடைமுறை இறக்குமதிகளில் | 4.4 | 5.1 | 6.5 | 6.5 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.

முதலீட்டுச் சபையின் தொழில் முயற்சிகளுக்கு அவற்றின் தொழிற்பாட்டு மூலதனத்திற்காக வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளினால் வழங்கப்பட்ட கொடுகடன்களையும் முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் மூலப்பொருள் இறக்குமதிகளின் நிதியிடலுக்கான கொடுகடன் வசதிகளையும் உள்ளடக்கிய வர்த்தகக் கடன்களையும் உள்ளடக்கியிருந்தன.

## வெளிநாட்டுச் சொத்துக்கள்

இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1993 இறுதியின் சிஎஉ 15,440 இலட்சத்திலிருந்து (ரூ. 1,052,580 இலட்சம்) 1994 இறுதியில் சிஎஉ 17,920 இலட்சத்திற்கு (ரூ. 1,303,400 இலட்சம்) 16 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்து வெளிநாட்டு மூலதனத்தின் மிதமான தேறிய உட்பாய்ச்சலையும் தற்போதைய

அமைப்புச் சீராக்க வசதிகளின்கீழ் அதிகரிக்கப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான சிஎஉ 470 இலட்சம் கொண்ட தேறிய உட்பாய்ச்சலையும் பிரதிபலித்தன. மத்திய வங்கியினாலும் அரசினாலும் வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 1,720 இலட்சத்தினால் சிஎஉ 13,890 இலட்சத்திற்கு அதிகரித்தன. 1994 இறுதியில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1995 இற்கு திட்டமிடப்பட்ட இறக்குமதிகளின் 5.9 மாத இறக்குமதிகளுக்கு நிதியிடப் போதுமானதாகக் காணப்பட்ட வேளையில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் திட்டமிடப்பட்ட இறக்குமதிகளின் 4.6 மாத இறக்குமதிகளுக்கு நிதியிடப் போதுமானதாகக் காணப்பட்டன.

## செலாவணி வீத அசைவுகள்

யப்பானிய யென்னுக்கு எதிராக இலங்கை ரூபா ஆண்டு முழுவதும் தேய்வடைந்தமை நீங்கலாக இலங்கை ரூபா 1994 இல் அனைத்து முக்கிய பன்னாட்டு நாணயங்களுக்கு எதிராகவும் தளம்பல்களைக் கொண்டிருந்தது. ரூபாவின் அசைவுகள் பன்னாட்டுச் சந்தையில் நிலவிய வெளிநாட்டு செலாவணி மற்றும் நிதிச் சந்தைகளினது தொடர்ந்து மாறுபடும் நிலைமைகளின் காரணமாக முக்கிய நாணயங்களினது குறுக்கு வீதத்திலேற்பட்ட தளம்பல்களையும் இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட நிலைமைகளையும் பிரதிபலிப்பதாக இருந்தது. 1993 உடன் ஒப்பிடுகையில் 1994 இல் யப்பானிய யென், டியூச்மார்க், பிரான்சிய பிராங்கு மற்றும் இசுடேர்லிங் பவுண் என்பனவற்றுக்கெதிராக ஐக்கிய அமெரிக்க டொலர் கடுமையாக வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக 1993 இறுதிக்கும் 1994 இறுதிக்கும் இடையில் இடையீட்டு நாணயமான ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக இலங்கை ரூபா 0.8 சதவீதத்தினால் தேய்வடைந்தது. எனினும் பன்னாட்டு சந்தையில் சார்பு ரீதியில் உறுதியான நாணயங்களுக்கெதிராக இலங்கை நாணயம் உயர்ந்த வீதமொன்றில் தேய்வடைந்தது. அதாவது யப்பானிய யென்னுக்கு எதிராக 11.4 சதவீதத்தினாலும் டியூச் மாக்கிற்கெதிராக 10.7 சதவீதத்தினாலும், பிரான்சியபிராங்கிற்கு எதிராக 9.1 சதவீதத்தினாலும், இசுடேர்லிங் பவுணுக்கெதிராக 5.8 சதவீதத்தினாலும் இலங்கை ரூபா தேய்வடைந்தது. இலங்கை ரூபாவானது இந்திய ரூபாவுக்கெதிராகவும் 1 சதவீதத்தினால் தேய்வடைந்தது. முக்கிய நாணயங்களுக்கெதிரான அசைவுகளின் கூட்டுவிளைவாக முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட 7.1 சதவீத தேய்வுடன் ஒப்பிடுகையில் சிஎஉ இற்கெதிராக இலங்கை ரூபா 6.3 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

முக்கிய வர்த்தகப் பங்காளர்கள் தொடர்பாக நிறையேற்றப்பட்ட வர்த்தக பெயரவு செலாவணி வீதம் என வரைவிலக்கணம் தரப்படும் இலங்கையின் பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதம் 1993 திசெம்பரிலிருந்து 1994 திசெம்பர்வரை புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் 5.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதே அடிப்படையில் இலங்கைக்கும் முக்கிய வர்த்தகப் பங்காளர்களுக்குமிடையே பணவீக்க மாறுபாடுகளுக்குச் சீராக்கம் செய்யப்பட்ட பெயரளவுச் செலாவணி வீதமாகிய உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதம் 3.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

## வெளிநாட்டுப் படுகடன்

*1994 இறுதியில் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் சிஎஉ 60,890 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் 1993 இறுதியிலிருந்து 1994 இறுதிவரை சிஎஉ 5,040 இலட்சங்கொண்ட அதிகரிப்பையும் பதிவு செய்துள்ளது. தனியார் துறைக்கான நீண்டகால, குறுங்காலக் கடன் வழங்கலில் ஏற்பட்ட அதிகரிப்பினை இவ்வதிகரிப்பு பெருமளவு பிரதிபலித்தது. 1994 இறுதியில் வெளிநின்ற கடன்களில் 69 சதவீதத்திற்கு வகைகூறிய அரசின் நடுத்தர நீண்டகாலக் கடன்கள் யப்பான், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு என்பனவற்றினால் வழங்கப்பட்ட சலுகைக் கடன்களின் காரணமாக சிஎஉ 690 இலட்சத்தினால் அதிகரித்தன. 1994 இல் பன்னாட்டு நாணய நிதியத்துடனான அதிகரிக்கப்பட்ட அமைப்புச் சீராக்க வசதிகளின் மூன்றாவது ஆண்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான முதலாவது தொகுதியின் சிஎஉ 560 இலட்சம் கொண்ட தொகையொன்றினையும் இலங்கை பெற்றுக்கொண்டது. அமைப்புச் சீராக்க வசதிகளின் கீழ் முன்னர் பெறப்பட்ட கடன் ஒன்று தொடர்பான சிஎஉ 90 இலட்சம் கொண்ட தொகை மீளச் செலுத்தப்பட்டதனால் பன்னாட்டு நாணய நிதியத்திற்கான வெளிநின்ற படுகடன் 1994 இறுதியில் சிஎஉ 470 இலட்சத்தினால் சிஎஉ 4,230 இலட்சத்திற்கு அதிகரித்தது.*

## படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

*நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்களின் தீர்ப்பனவையும் அனைத்து வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவையும் உள்ளடக்கிய படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1994 இல் சிஎஉ 3,720 இலட்சத்திற்கு 4 சதவீதத்தால் உயர்வடைந்தன. எனினும் இவ்வாண்டில் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்து பெறப்பட்ட அதிகரித்த வருவாய்களின் காரணமாக படுகடன் பணி விகிதம் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையே 13.8 சதவீதத்திலிருந்து 13.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பொருட்கள், பணிகள், மற்றும் தனியார் மாற்றல்களின்ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் விகிதாசாரமாகப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1993 இன் 11.8 சதவீதத்திலிருந்து 1994 இல் 11.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.*

## அரச நிதி

*தேசிய தேர்தலுக்கான நிகழ்ச்சிகள் இடம்பெற்றமை காரணமாக 1994 இல் இறைக் கொள்கைகளில் தளர்த்தல் காணப்பட்டது. மொ. உ. உ. இன் 1.1 சதவீதத்திற்குச் சமமான அளவிற்கு நடைமுறைக் கணக்குத் தொழிற்பாட்டில் மிகையை உருவாக்குவதன் மூலமும் மொத்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை மொ.உ.உ. இல் 6.8 சதவீதத்தில் கட்டப்படுத்துவதன் மூலமும் அரசின் இறைத் தொழிற்பாட்டினை உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் பலவீனமான அரசிறை முயற்சிகளும் தளர்த்தப்பட்ட செலவினக் கொள்கைகளும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை மொ.உ.உ. இன் 2.9 சதவீதத்திற்கும் மொத்த வரவு செலவுத் திட்டப் பற்றாக் குறறையினை மொ. உ. உ. இன் 10 சதவீதத்திற்கும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கச் செய்து மிக உயர்ந்த மட்டத்திலான உள்நாட்டுக் கடன்பாடுகளை வேண்டி நின்றன.*

அரசின் அரசிறை முந்திய ஆண்டின் 15 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் 12 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்து ரூ. 1,100,380 இலட்சமாக விளங்கியது. இதன்விளைவாக அரசிறை/மொ.உ.உ. விகிதம் 1993 இன் 19.7 சதவீதத்திலிருந்து 1994 இல் 19.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த வரி அரசிறை 1994 இல் ரூ. 994,120 இலட்சமாக அமைந்து அரசின் அரசிறையில் 90 சதவீதத்திற்கு வகைகூறியது. வரி அரசிறை அமைப்பில் பொருட்கள் மற்றும் பணிகள் மீதான வரிகளின் முக்கியத்துவமும் அத்தகைய அரசிறை ரூ. 479,630 இலட்சத்திலிருந்து (56 சதவீதம்) 1994 இல் ரூ. 566,850 இலட்சத்திற்கு (57 சதவீதம்) அதிகரித்ததன் மூலம் மேலும் உறுதியடைந்தது. இவ்வபிவிருத்திக்கான முக்கிய காரணம் பாதுகாப்புத் தீர்வை மற்றும் கலால் வரிகளிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் அதிகரித்தமையாகும். இறக்குமதித் தீர்வைச் சேகரிப்புக்கள் ரூ. 225,980 இலட்சமாக அமைந்து 9 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்ததுடன் 1994 இன் வரி அரசிறையில் 23 சதவீதத்திற்கும் வகை கூறின. அதேவேளை 1994 ஏப்பிறலில் உச்ச வருமான வரிவீதம் 40 சதவீதத்திலிருந்து 35 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதன் மத்தியிலும் வருமான வரிகள் 1993 இன் ரூ. 125,430 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 152,770 இலட்சத்திற்கு அதிகரித்து செழிப்பான வளர்ச்சியினைப் பிரதிபலித்தன.

வரியல்லா அரசிறை ரூ. 106,210 இலட்சமாக விளங்கி முந்திய ஆண்டினைவிட 15 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. வட்டி வருமானம் வரியல்லா அரசிறையில் ஏறத்தாழ 43 சதவீதத்தைக் கொண்டிருந்த வேளையில் மத்திய வங்கியின் இலாப மாற்றல்கள், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சிறிலங்கா ரெலிகொம் என்பனவற்றின் மீதான நிதிச் சட்டத்தின் கீழான தீர்வைகளையும் உள்ளடக்கிய இலாபங்களும் பங்கிலாபங்களும் மற்றும் கட்டணங்களும் விதிப்பனவுகளும் 1994 இல் வரியல்லா அரசிறையில் மேலும் 37 சதவீதத்தை வழங்கின.

அரசின் மொத்தச் செலவு ரூ. 1,677,680 இலட்சமாக (மொ. உ. உ. இல் 29 சதவீதம்) அமைந்து முந்திய ஆண்டின் ரூ. 1,404,600 இலட்சத்தினைவிட (மொ. உ. உ. இல் 28.1 சதவீதம்) 19 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. நடைமுறைச் செலவு ரூ. 1,270,840 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டின் மொ.உ.உ. இல் 20.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் 22 சதவீதத்திற்கு வகைகூறியது. அதேவேளை அரச முதலீடு ரூ. 404,550 இலட்சமாக அமைந்து மொ.உ.உ. தொடர்பாக நோக்குகையில் 1993 இன் 8 சதவீதத்திலிருந்து 1994 இல் 7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

நடைமுறைச் செலவு ரூ. 1,270,840 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டின் 14 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1994 இல் 24 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பினைக் காட்டியது. பாதுகாப்புச் செலவின் மட்டம் உயர்வடைந்தமையினதும் பொது நிருவாகம் மீதான செலவுகள் அதிகரித்தமையினதும் காரணமாக சம்பளங்கள், பயணம், நிரம்பல்கள் மற்றும் தேவைகளின் பேரிலான செலவு ரூ. 547,000 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டின் 13 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 22 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. ஒவ்வொரு ஆண்டும் மிக உயர்வான கடன்பாடுகளை விளைவித்த தொடர்ந்துவரும் வரவு செலவுத் திட்டக் குறைகளின் உயர்ந்த அளவான செலவினைப் பிரதிபலிப்பதாய்

## அட்டவணை 1.4

### அரசின் இறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு

ரூ.ப.இ.

| விடயம் | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறை | 67,964 | 76,179 | 85,781 | 98,339 | 110,038 |
| வரி அரசிறை | 61,206 | 68,157 | 76,353 | 85,891 | 99,417 |
| வரியல்லா அரசிறை | 6,758 | 8,022 | 9,428 | 12,448 | 10,621 |
| மொத்தச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் | 99,814 | 119,527 | 116,973 | 140,460 | 167,768 |
| மீண்டெழும் | 71,771 | 83,756 | 89,639 | 102,288 | 127,084 |
| மூலதனமும் தேறிய கடன் வழங்கலும் | 28,043 | 35,771 | 27,334 | 38,172 | 40,684 |
| நடைமுறைக் கணக்கு மிகை/குறை (-) | -3,807 | - 7,577 | -3,858 | -3,949 | -17,046 |
| வரவு செலவுத் திட்டக் குறை (கொடைகளுக்கு முன்) | -31,850 | -43,348 | -31,192 | -42,121 | -57,730 |
| நிதியிடல் | 31,850 | 43,348 | 31,192 | 42,121 | 57,730 |
| வெளிநாட்டுக் கொடைகள் | 6,697 | 7,870 | 8,280 | 8,025 | 8,257 |
| வெளிநாட்டுக் கடன்பாடுகள் | 11,645 | 19,329 | 7,361 | 9,855 | 11,778 |
| உள்நாட்டு நிதியிடல் | 13,508 | 16,149 | 15,551 | 24,241 | 37,696 |
| வங்கியல்லா | 13,251 | 16,114 | 17,873 | 30,320 | 36,539 |
| வங்கி | 257 | 35 | -2,322 | -6,079 | 1,157 |

### மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக (%)

| விடயம் | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறை | 21.1 | 20.4 | 20.2 | 19.7 | 19.0 |
| வரி அரசிறை | 19.0 | 18.3 | 17.9 | 17.2 | 17.2 |
| வரியல்லா அரசிறை | 2.1 | 2.2 | 2.2 | 2.5 | 1.8 |
| மொத்தச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் | 31.0 | 32.1 | 27.5 | 28.1 | 29.0 |
| மீண்டெழும் | 22.3 | 22.5 | 21.1 | 20.5 | 22.0 |
| மூலதனமும் தேறிய கடன் வழங்கலும் | 8.7 | 9.6 | 6.4 | 7.6 | 7.0 |
| நடைமுறைக் கணக்கு மிகை / குறை ( - ) | -1.2 | -2.0 | -0.9 | -0.8 | -2.9 |
| வரவு செலவுத் திட்டக் குறை (கொடைகளுக்கு முன்) | -9.9 | -11.6 | -7.3 | -8.4 | -10.0 |
| நிதியிடல் | 9.9 | 11.6 | 7.3 | 8.4 | 10.0 |
| வெளிநாட்டுக் கொடைகள் | 2.1 | 2.1 | 1.9 | 1.6 | 1.4 |
| வெளிநாட்டுக் கடன்பாடுகள் | 3.6 | 5.2 | 1.7 | 2.0 | 2.0 |
| உள்நாட்டு நிதியிடல் | 4.2 | 4.3 | 3.7 | 4.9 | 6.5 |
| வங்கியல்லா | 4.1 | 4.3 | 4.2 | 6.1 | 6.3 |
| வங்கி | 0.1 | ... | -0.5 | -1.2 | 0.2 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

1994 இல் அரச படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 380,310 இலட்சமாக அமைந்து 26 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தன. ஓய்வூதியங்கள் மீதான உயர்ந்த செலவு மற்றும் பல்வேறு நலன்புரிச் செலவு நிகழ்ச்சித் திட்டங்கள் குறிப்பாக 1994 மேயில் அறிவிக்கப்பட்ட நிவாரண வழிமுறைகளின் பின்னர் விரிவடைந்தமை என்பனவற்றின் தாக்கத்தின்கீழ் ஓய்வூதியங்கள், நலன்புரிச் செலவு நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கிய குடியிருப்பாளருக்கான மொத்த மாற்றல் கொடுப்பனவுகள் ரூ. 282,630 இலட்சமாக விளங்கி 27 சதவீத உயர்வினைக் காட்டின.

நலிவடைந்த அரசிறை முயற்சிகள், உயர்வான நடைமுறைச் செலவு என்பனவற்றின் பின்னணியில் வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கு முன் எப்போதுமில்லாத உயர்ந்த அளவான ரூ. 170,460 இலட்சம் கொண்ட பற்றாக்குறையினை ஏற்படுத்தி அத்தகைய சமமின்மைகளைக் குறைவடையச் செய்யும் அண்மைக்காலப் போக்கில் எதிர்மாறான நிலையை ஏற்படுத்தியது. இதனால் 1991 இன் மொ.உ.உ. இல் 2.0 சதவீதத்திலிருந்து 1993 இல் மொ.உ.உ. இல் 0.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 1994 இல் மொ.உ.உ இல் 2.9 சதவீதத்திற்கு உயர்வடைந்து அரசின் இறைத் தொழிற்பாடுகள் மிக உயர்வான நுகர்வுச் சார்பினைக் கொண்டிருந்தமையைப் பிரதிபலித்தது.

1994 இல் மூலதனச் செலவும் தேறிய கடன் வழங்கலும் முந்திய ஆண்டின் ரூ. 381,720 இலட்சம் அல்லது மொ.உ.உ. இன் 7.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 406,840 இலட்சமாக அல்லது மொ. உ. உ. இல் 7.1 சதவீதமாக விளங்கின. அரச முதலீடு 1993 இன் ரூ. 339,270 இலட்சத்துடன் (மொ.உ.உ. இல் 8.0 சதவீதம்) ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 404,550 இலட்சமாக (மொ. உ. உ. இன் 7.0 சதவீதம்) விளங்கின. அரச முதலீடுகளின் தாழ்வான மட்டம் அண்மை ஆண்டுகளில் அரசிறை அபிவிருத்திகளில் காணப்பட்ட ஏற்கத்தகாத பண்பாகக் காணப்பட்டது. அரச முதலீடுகள் / மொ.உ.உ. விகிதம் 1989 இன் 10.5 சதவீதத்திலிருந்து 1994 இல் 7 சதவீதத்திற்குத் தொடர்ச்சியாக வீழ்ச்சியுறுவதால் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான அவசரமான தேவை மற்றும் இலங்கையின் அரச முதலீடுகளுக்குத் தேவைப்படும் கணிசமான உதவுநர்களது ஆதரவு என்பனவற்றின் பின்னணியில் அரசின் முதலீடுகள் நீடிக்கத்தக்க மட்டத்தில் பேணப்படவேண்டியது அவசியமாகும்.

அரசிறை, செலவுப் பாய்ச்சல்கள் 1993 இன் ரூ. 421,210 இலட்சம் அல்லது மொ.உ.உ. இல் 8.4 சதவீதம் கொண்ட குறையுடன் ஒப்பிடுகையில் ரூ. 577,300 இலட்சம் அல்லது 10 சதவீதம் கொண்ட குறையை ஏற்படுத்தின. 1994 இன் (கொடைகளுக்குப் பிந்திய) வரவு செலவுத் திட்டக் குறை ரூ. 494,730 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டின் பற்றாக்குறையான ரூ. 340,960 இலட்சத்தினைவிட 45 சதவீதம் கூடுதலாக விளங்கியது. வெளிநாட்டு மூலங்களிலிருந்தான தேறிய கடன்பாடுகள் 1993 இன் ரூ. 98,550 இலட்சத்திற்கெதிராக ரூ. 117,780 இலட்சமாக அமைந்து மொ. உ. உ. இன் விகிதமாக நோக்குகையில் முந்திய ஆண்டில் காணப்பட்டவாறு 2.0 சதவீதமாக விளங்கியது. அரசின் வரவு செலவுத் திட்டத் தொழிற்பாடுகளில் குறிப்பாக நடைமுறைக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்களின் பெருமளவிலான மூலவள இடைவெளியினைப் பிரதிபலிப்பதாய் உள்நாட்டுக்

கடன்பாடுகள் 1994 இல் ரூ. 376,960 இலட்சமாக அமைந்து குறிப்பிடத்தக்களவான 56 சதவீத உயர்வினைக் காட்டியது. இதன்விளைவாக மொ.உ.உ. தொடர்பான உள்நாட்டு நிதியிடல் 1993 இன் 4.9 சதவீதத்திலிருந்து 1994 இல் 6.5 சதவீதத்திற்கு உயர்வடைந்து வரவு செலவுத் திட்டத்தின் மீதான படுகடன் சுமையினை மேலும் அதிகரித்தது.

1994 இல் இறைத் தொழிற்பாடுகளில் ஏற்பட்ட பெருமளவிலான மூலவள இடைவெளி காரணமாக வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிதியிடுவதற்கு அரசு வங்கித் தொழில் முறையினை நாடவேண்டி ஏற்பட்டது. மத்திய வங்கியில் அரசின் காசு நிலுவைகள் ரூ. 10,110 இலட்சம் கொண்ட தொகையினால் அதிகரித்தபோதிலும் ரூ. 18,640 இலட்சம் பெறுமதி கொண்ட மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்கள் பயன்படுத்தப்பட்டமையும் ரூ. 11,450 இலட்சம் கொண்ட தொகை திறைசேரி உண்டியல்கள் மூலம் மேலும் கடனாகப் பெறப்பட்டமையும் மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்களும் 1994 இல் ரூ. 11,570 இலட்சம் கொண்ட தேறிய கடன்பாட்டினை ஏற்படுத்தி பொருளாதாரத்தில் ஒதுக்குப் பணத்தின் (உயர்வலு நாணயம்) விரிவாக்கத்திற்குக் காரணமாயிற்று. எனினும் 1994 இல் வர்த்தக வங்கிகளிடமிருந்தான அரசின் கடன்பாடுகள் ரூ. 23,810 இலட்சத்தினால் அதிகரித்த போதிலும் அரசின் வைப்பு நிலுவைகள் ரூ. 29,860 இலட்சத்தினால் அதிகரித்தமை காரணமாக வர்த்தக வங்கிகளால் அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் ரூ. 6,050 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1994 இல் வெளிநின்ற அரச படுகடனின் பெறுமதி ரூ. 5,492,920 இலட்சமாக விளங்கி 14 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. மொத்தப் படுகடன் / மொ. உ. உ. விகிதம் 1993 இன் 97 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் 95 சதவீதமாக விளங்கியது. அரசின் படுகடனில் 45 சதவீதத்திற்கு வகைகூறும் மொத்த உள்நாட்டுப்படுகடன் 1993 இறுதியின் ரூ. 2,136,850 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 2,491,180 இலட்சத்திற்கு 17 சதவீதத்தினால் உயர்வடைந்த வேளையில் வெளிநாட்டுப் படுகடன் ரூ. 2,702,240 இலட்சத்திலிருந்து ரூ. 3,001,740 இலட்சத்திற்கு 11 சதவீதத்தால் அதிகரித்தது. நடுத்தர, நீண்டகால உள்நாட்டுக் கடன்கள் 1994 திசெம்பர் இறுதியில் ரூ. 1,403,920 இலட்சத்திற்கு ரூ. 285,520 இலட்சத்தினால் அதிகரித்த வேளையில் குறுங்காலப் படுகடன் ரூ. 1,087,260 இலட்சத்திற்கு ரூ. 68,810 இலட்சத்தினால் அதிகரித்து அரசின் படுகடன் தோற்றப்பாட்டில் நடுத்தர, நீண்டகாலப் படுகடனை நோக்கிய அமைப்பு ரீதியான மாற்றத்தினைப் பிரதிபலித்தது. இதன்விளைவாக மொத்த உள்நாட்டுப் படுகடனில் நடுத்தர நீண்டகாலக் கடனின் பங்கு 1993 இன் 52 சதவீதத்திலிருந்து 1994 இல் 56 சதவீத்திற்கு உயர்வடைந்தது. மொ. உ. உற்பத்தியின் சதவீதமாக மொ. உ. படுகடன் முன்னைய ஆண்டின் 43 சதவீதத்தில் விளங்கியது.

அரசின் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் ரூ. 226,710 இலட்சம் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும் ரூ. 380,310 இலட்சம் வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கி மொத்தம் ரூ. 607,020 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 6 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமொன்றாக படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 1993 இன் 11.5 சதவீதத்திலிருந்து 1994 இல் 10.5 சதவீதத்திற்குச் சிறிதளவால்

குறைவடைந்தமைக்கு ரூபாப் பிணைகளின் பேரிலான முதிர்ச்சியடையும் கடன்களின் தொகை குறைவாகக் காணப்பட்டமையே பெருமளவு காரணமாகும். வெளிநாட்டுப் படுகடன் மீதான கடன் மீளளிப்புக்கள் ரூ. 76,060 இலட்சமாக விளங்கி 1993 இனைவிட 9 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன.

**பண நிரம்பல்**

1994 இல் பண நிரம்பலின் வளர்ச்சி வீதம் தொடர்ந்தும் உயர்வாக விளங்கி பொருளாதாரத்திலுள்ள தொடர்ச்சியான உயர்ந்த கேள்வி அழுத்தத்தை வலியுறுத்தியது. குறுகிய பண நிரம்பல் (M 1 ) ஆண்டின் இறுதியில் 19 சதவீத ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்து 1993 இல் பதிவு செய்யப்பட்ட அதே வளர்ச்சி வீதத்தில் காணப்பட்ட வேளையில் விரிந்த பண நிரம்பலின் (M 2) வளர்ச்சி வீதம் முன்னைய ஆண்டின் 23.5 சதவீத வளர்ச்சியிலிருந்து 1994 இல் 19.6 சதவீதத்திற்கு மிதமாக அதிகரித்தது. 1994 சனவரி – மே காலப்பகுதியில் பணநிரம்பலின் வளர்ச்சியில் மிதமான தன்மை காணப்பட்டபோதும் சராசரியாக நாணய வளர்ச்சி ஆண்டு முழுவதும் தொடர்ந்தும் உயர்வாகவே காணப்பட்டது.

உள்நாட்டுக் கொடுகடனின் ஏற்பட்ட உறுதியான உயர்வே 1994 இல் தொடர்ச்சியான உயர்ந்த நாணய விரிவாக்கம் காணப்பட்டமைக்கு முக்கிய காரணமாகும். தனியார் துறைக் கொடுகடனில் ஏற்பட்ட 21 சதவீதம் கொண்ட வளர்ச்சி, தேறிய அரச துறைக் கொடுகடனில் ஏற்பட்ட 4 சதவீத விரிவாக்கம் என்பனவற்றின் தாக்கத்தினால் உள்நாட்டுக் கொடுகடன் முன்னைய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட 3.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 14.7 சதவீதத்தினால் மிகக் கூடுதலாக உயர்வடைந்தது. எனினும் திரண்ட சென்மதி நிலுவையின் தாழ்ந்த மிகையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 1993 இன் 87.9 சதவீதம் கொண்ட மிக உயர்ந்த வளர்ச்சியிலிருந்து 37.7 சதவீதத்தினால் மிதமாக அதிகரித்து நாணய விரிவாக்கத்தின் மீதான அழுத்தத்தை இலகுபடுத்தியது.

நாணயத்தளம் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 25.9 சதவீதம் கொண்ட (ரூ. 116,090 இலட்சம்) உயர்ந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் இறுதியில் 20.5 சதவீதத்தினால் (ரூ. 115,880 இலட்சம்) விரிவடைந்து ரூ. 680,550 இலட்சத்தினை அடைந்தது. மூலப்பக்கத்தில், மத்திய வங்கியுடனான ஒன்றுசேர்ந்த தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 142,880 இலட்சங்களினால் வளர்ச்சியடைந்து ஒதுக்குப் பணத்தின் விரிவாக்கத்திற்கான முக்கிய உதவுகாரணியாக தொடர்ந்தும் விளங்கியது. மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் முக்கியமாக மத்திய வங்கிப் பிணைகளின் வழங்கலினூடாக ரூ. 27,000 இலட்சத்தினால் குறைக்கப்பட்டமையும் மத்திய வங்கியின் மீள்நிதியிடல் கொடுகடன்களில் செய்யப்பட்ட படிப்படியான குறைப்பும் ஒதுக்குப் பணத்தின் அதிகரிப்பினை முன்னைய ஆண்டின் ரூ. 116,090 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 115,880 இலட்சத்திற்கு மட்டுப்படுத்த உதவின. பண நிரம்பலின் வளர்ச்சியுடன் தொடர்புபட்ட ஒதுக்குப் பணத்தின் உயர்ந்த வளர்ச்சியின் விளைவாக பணநிரம்பலுக்கும் நாணயத் தளத்திற்குமிடையிலான விகிதமான பணப்பெருக்கி 1993 இறுதியின் 2.86 இலிருந்து 1994 இறுதியில் 2.84 இற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. வைப்புக்களில் நாணயத்தின் பங்கு 1993 இன் 24.8 சதவீதத்திலிருந்து 1994 இல் 25.2 சதவீதத்திற்கு

உயர்வடைந்தமையில் காணப்பட்டவாறு பணத்துக்கான வலுவடைந்த கொடுக்கல் வாங்கல் கேள்வியை வலியுறுத்துகின்றது.

நாணயத்தையும் பொதுமக்கள் வசமிருந்த கேள்வி வைப்புக்களையும் உள்ளடக்கிய குறுகிய பண நிரம்பல் (M 1) 1994 இறுதியில் ரூ. 715,200 இலட்சமாக அமைந்து 19 சதவீத அதிகரிப்பினை (ரூ. 114,160 இலட்சம்) கொண்டிருந்தது. முன்னைய ஆண்டிலும் 19.0 சதவீதமான (ரூ. 96,140 இலட்சம்) வளர்ச்சியே காணப்பட்டது. பணத்திற்கான கொடுக்கல் வாங்கல் கேள்வி வலுவடைகின்றமையைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் சுற்றோட்டத்திலுள்ள நாணயம் 1993 இன் 18 சதவீதம் (ரூ. 48,530 இலட்சம்) கொண்ட அதிகரிப்பிற்கெதிராக 21 சதவீதத்தினால் (ரூ. 67,730 இலட்சம்) வளர்ச்சியடைந்த வேளையில் கேள்வி வைப்புக்கள் முன்னைய ஆண்டின் 21 சதவீதம் (ரூ. 47,610 இலட்சம்) கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 17 சதவீதத்தினால் (ரூ. 46,430 இலட்சம்) உயர்வடைந்தது. இதன்படி M1 இல் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பங்கு 1993 இன் 53 சதவீதத்திலிருந்து 1994 இறுதியில் 54 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

அதேவேளை, வர்த்தக வங்கிகளின் தீவிரமான வைப்புத் திரட்டல் முயற்சிகளின் காரணமாக வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட தவணை சேமிப்பு வைப்புக்கள் (போலி நாணயம்) 1993 இன் 26 சதவீத அதிகரிப்புடன் (ரூ. 210,470 இலட்சம்) ஒப்பிடுகையில் 20 சதவீதத்தினால் ரூ. 202,120 இலட்சம்) வளர்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டுகளைப் போலவே, வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பில் பெரும்பங்கிற்கு 19 சதவீதத்தினால் (ரூ. 167,680 இலட்சம்) உயர்வடைந்த தனியார் துறைக் கூறுகளின் வைப்புக்களில் ஏற்பட்ட உயர்வே பங்களித்தது. அரச கூட்டுத்தாபனங்களினதும் கூட்டுறவு நிறுவனங்களினதும் தவணை சேமிப்பு வைப்புக்கள் முறையே 29 சதவீதத்தினாலும் (ரூ. 29,490 இலட்சம்) 15 சதவீதத்தினாலும் (ரூ. 4,950 இலட்சம்) வளர்ச்சிகண்டன. இதன்படி, M 1 இனையும் பொதுமக்கள் வசமிருந்த தவணை சேமிப்பு வைப்புக்களையும் உள்ளடக்கியதான விரிந்த பண நிரம்பல் (M 2) 1994 இல் 19.6 சதவீதத்தால் விரிவடைந்தது.

தனியார் துறைக்கான கொடுகடனின் உயர்ந்த வளர்ச்சியே 1994 இல் உயர்ந்த நாணய விரிவாக்கத்திற்கான முக்கிய உதவு காரணியாக விளங்கியது. அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் குறைக்கப்பட்ட போதும் உள்நாட்டுக் கொடுகடன் முன்னைய ஆண்டின் 3.5 சதவீதம் (ரூ. 53,620 இலட்சம்) கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 14.7 சதவீதம் (ரூ. 233,360 இலட்சம்) கொண்ட உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு தனியார்துறைக் கூறுகளுக்கான 21 சதவீதம் (ரூ. 239,170 இலட்சம்) கொண்ட உயர்ந்த கொடுகடன் வளர்ச்சியே பெருமளவிற்குக் காரணமாகும்.

1994 இல் வங்கித் தொழில் முறையினால் அரசதுறைக்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் 1993 இன் 17 சதவீதம் (ரூ. 73,460 இலட்சம்) கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு மாறாக 4 சதவீதத்தினால் அதிகரித்தமையானது (ரூ. 13,930 இலட்சம்) உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கம் மேலும் விரிவடையக் காரணமாயிற்று. அரசின் வைப்புக்கள் ரூ. 10,110 இலட்சத்தினால் கட்டியெழுப்பப்பட்டு சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்கள் ரூ. 2,370 இலட்சத்தினால் குறைவடைந்து

## அட்டவணை 1.5

### நாணய அளவுகள் 1989 - 1994

ரூபா பத்து இலட்சங்களில்

| விடயம் | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 |
|---|---|---|---|---|---|---|
| உள்நாட்டுக் கொடுகடனிலேற்பட்ட மாற்றம் | 5,454 | 17,543 | 14,362 | 19,121 | 5,362 | 23,336 |
| அரசுக்கான தேறிய கொடுகடனிலேற்பட்ட அதிகரிப்பு | 54 | 3,078 | 2,595 | 558 | -7,346 | 1,393 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடனிலேற்பட்ட அதிகரிப்பு | 3,075 | 1,774 | -1,559 | 673 | -6,975 | -2,612 |
| கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடனிலேற்பட்ட அதிகரிப்பு | -140 | 418 | 161 | 264 | -118 | 638 |
| ஏனைய தனியார் துறைக்கான கொடுகடனிலேற்பட்ட அதிகரிப்பு | 2,465 | 12,273 | 13,165 | 17,626 | 19,800 | 23,917 |
| தேறிய வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றம் | -2,326 | 5,474 | 7,225 | 6,731 | 21,238 | 17,102 |
| மொத்தச் சொத்துக்கள் / பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் | 3,128 | 23,017 | 21,587 | 25,852 | 26,599 | 40,438 |
| விரிந்த பணநிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு ($M_2$) | 8,487 | 14,584 | 21,080 | 18,604 | 30,661 | 31,628 |
| ஏனைய பொறுப்புக்களில் (தேறிய) ஏற்பட்ட அதிகரிப்பு | -5,359 | 8,433 | 507 | 7,248 | -4,062 | 8,810 |

### நாணய அளவுகளின் சதவீத அதிகரிப்பு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டுக் கொடுகடனின் சதவீத அதிகரிப்பு | 5.6 | 17.1 | 12.0 | 14.2 | 3.5 | 14.7 |
| மொத்த சொத்துக்கள், பொறுப்புக்களின் சதவீத அதிகரிப்பு | 3.0 | 17.7 | 16.6 | 17.0 | 15.0 | 19.8 |
| மொத்த உள்நாட்டுக் கொடுகடன் அதிகரிப்பில் அரசின் சதவீதம் | 1.0 | 17.5 | 18.1 | 2.9 | -137.0 | 6.0 |
| மொத்த உள்நாட்டு கொடுகடன் அதிகரிப்பில் அரசு அல்லாத்துறையின் சதவீதம் | 99.0 | 82.5 | 81.9 | 97.1 | 237.0 | 94.0 |
| விரிந்த பண நிரம்பலின் ($M_2$) சதவீத அதிகரிப்பு | 12.4 | 19.1 | 23.2 | 16.6 | 23.5 | 19.6 |
| குறுகிய பண நிரம்பலின் ($M_1$) சதவீத அதிகரிப்பு | 9.1 | 12.8 | 18.0 | 7.3 | 19.0 | 19.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

காணப்பட்டபோதும் மத்திய வங்கியிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 17,600 இலட்சத்தினால் அதிகரித்தமைக்கு மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடமைகள் ரூ. 11,450 இலட்சத்தினால் அதிகரித்தமை காரணமாக இருந்ததுடன் அரசிற்கான தற்காலிக முற்பணங்களில் ஏற்பட்ட ரூ. 18,630 இலட்சம் கொண்ட அதிகரிப்பு 1994 இன் பாதகமான இறைச் சூழ்நிலையைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. அதேவேளை ஆய்விற்குரிய ஆண்டில் வர்த்தக வங்கிகளிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் வீழ்ச்சியடைந்தமைபற்றி பரிசீலிக்கப்பட்டுவருகின்றது. வர்த்தக வங்கிகளிலிருந்து அரசிற்கான மொத்தக் கொடுகடன் ரூ. 23,820 இலட்சத்தினால் அதிகரித்த போதும் அரச வைப்பு நிலுவைகள் ரூ. 29,860 இலட்சத்தினால் அதிகரித்தமையின் காரணமாக வர்த்தக வங்கிகளிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 6,040 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1994 இல் அரச கூட்டுத்தாபனங்களுக்கான வங்கிக் கொடுகடன் 33.6 சதவீதத்தினால் (ரூ. 26,120 இலட்சம்) வீழ்ச்சியடைந்தது. மசகெண்ணெய்க்கான குறைந்த பன்னாட்டு விலைகளின் பெருமளவு காரணமாக ஏற்பட்ட முன்னேற்றமடைந்த நிதியியல் நிலைமையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்பட்ட கடன் 1993 இன் ரூ. 4,160 இலட்சம் கொண்ட அதிகரிப்பிற்கு மாறாக ரூ. 24,000 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தது. கோதுமை மாவின் மொத்த விற்பனை விலை 1994 யூலையிலும் மீண்டும் ஓகத்திலும் குறைக்கப்பட்டபோதும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் வங்கிக் கடன் ரூ. 670 இலட்சத்தினால் சிறிதளவு அதிகரித்தமைக்கு குறிப்பாக ஆண்டின் தொடக்கப் பகுதியில் நிலவிய சாதகமான பன்னாட்டு கோதுமை விலைகளும் சலுகை ஒழுங்குகளின்கீழ் கோதுமைத் தானியம் கிடைக்கத்தக்காக இருந்தமையுமே காரணங்களாகும். இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கான வெளிநின்ற முற்பணங்கள் அக்கூட்டுத்தாபனம் தனியார் மயமாக்கப்பட்டதன் விளைவாக ரூ. 3,840 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை கூட்டுறவு நிறுவனங்களுக்கான மொத்த வங்கிக் கொடுகடன் 1993 இன் ரூ. 19,030 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 25,410 இலட்சத்திற்கு அதிகரித்தது.

தொடர்ந்து ஐந்தாவதாண்டாக திரண்ட சென்மதி நிலுவை நிலைமையில் காணப்பட்ட மிகையின் காரணமாக, இவ்வாண்டில் வங்கித் தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 1993 இன் 87.9 சதவீதம் (ரூ. 212,380 இலட்சம்) கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 37.7 சதவீதம் (ரூ. 171,020 இலட்சம்) கொண்ட மேலுமொரு உயர்வினைப் பதிவுசெய்தன. மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 142,880 இலட்சத்தினால் உயர்வடைந்தவேளையில் வர்த்தக வங்கிகளின் அத்தகைய சொத்துகள் ரூ. 28,140 இலட்சத்தினால் விரிவடைந்தன.

வைப்புப் பொறுப்புக்களில் ஏற்பட்ட உறுதியான அதிகரிப்பின் காரணமாக வர்த்தக வங்கித் தொழில்முறை 1994 இல் தொடர்ந்தும் திரவத்தன்மை கொண்டதாக விளங்கியது. வர்த்தக வங்கிகளின் திரவச் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் 23.4 சதவீதம் (ரூ. 125,040 இலட்சம்) கொண்ட உயர்வுடன் ஒப்பிடுகையில் 1994 இல் 18.5 சதவீதத்தினால் (ரூ. 122,040 இலட்சம்) அதிகரித்தன. திரவச் சொத்துக்களில்

ஏற்பட்ட விரிவாக்கம் முக்கியமாக வெளிநாட்டு நிலுவைகள், கையிலுள்ள பணம், திறைசேரி உண்டியல்களிலான முதலீடு என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்களினூடாக ஏற்பட்டது. இவ்வாண்டில் வைப்புப் பொறுப்புக்களுடன் தொடர்பான திரவச் சொத்துக்களில் ஏற்பட்ட மெதுவான அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் கேள்வி வைப்புக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் 1993 இறுதியின் 190.8 சதவீதத்திலிருந்து 1994 இறுதியில் 187.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவேளையில் மொத்த வைப்புக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் 40.6 சதவீதத்திலிருந்து 40.2 சதவீதத்திற்கு மிகச் சிறிதளவால் வீழ்ச்சிடைந்தது.

இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் (எதிரீட்டு விடயங்கள் நீங்கலாக) முன்னைய ஆண்டின் மிக உயர்ந்த அதிகரிப்பான 32 சதவீதத்துடன் (ரூ. 593,970 இலட்சம்) ஒப்பிடுகையில் 15 சதவீதத்தினால் ரூ. 371,620 இலட்சம்) விரிவடைந்தன. வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள் பொறுப்புக்களில் சில அமைப்பு ரீதியான மாற்றங்களும் காணப்பட்டன. மொத்தச் சொத்துக்களில் திரவச் சொத்துக்களின் பங்கு 1993 இன் 27.0 சதவீதத்திலிருந்து 1994 இல் 27.8 சதவீதத்திற்கு உயர்வடைந்தன. அரசபிணைகள் மற்றும் ஏனைய கருவிகளில் வெளிநாட்டுச் சொத்துக்களினதும் முதலீடுகளினதும் பங்குகள் 1993 இன் 8.4 சதவீதத்திலிருந்தும் 8.0 சதவீதத்திலிருந்தும் 1994 இல் முறையே 9.5 சதவீதத்திற்கும் 9.3 சதவீதத்திற்கும் உயர்வடைந்தன. நிலையான சொத்துக்களின் பங்கு 1993 இன் 21 சதவீதத்திலிருந்து 1994 இல் 17.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் பங்கு 51 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது. பொறுப்புக்கள் பக்கத்தில், கேள்விவைப்புக்களின் பங்கு 14.2 சதவீதத்திலிருந்து 14.8 சதவீதத்திற்கு அதிகரித்த வேளயில் மொத்த பொறுப்புக்களில் தவணை சேமிப்பு வைப்புக்களின் பங்கு 51.1 சதவீதத்திலிருந்து 53 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. மொத்த வைப்புக்களில் செலுத்தப்பட்ட மூலதனத்தின் பங்கு 10 சதவீதத்திற்கு 1 சதவீதப் புள்ளியால் உயர்வடைந்தவேளையில் ஏனைய பொறுப்புக்களின் பங்கு 21.1 சதவீதத்திலிருந்து 17.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## நாணயக் கொள்கை

நாணயக் கூட்டுக்களின் உறுதியான வளர்ச்சியின் பின்னணியில், 1994 இல் இறுக்கமான நாணய கொள்கையைப் பின்பற்றுவதற்கு மத்திய வங்கி நிர்ப்பந்திக்கப்பட்டது. தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துவதற்கு வங்கிக்கு இயலக் கூடியதாக இருந்தபோதும் அதன் பட்டியலில் திறைசேரி உண்டியல்களினூடாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடாத்துவதற்கு வரையறுக்கப்பட்ட வாய்ப்புக்களே காணப்படுகின்றமையினால் மிகைத் திரவத்தன்மையை ஈர்த்துக்கொள்வதற்கு மத்திய வங்கி 3-6 மாத முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட அதன் சொந்தப் பிணைகளை வழங்கியது. இதன்விளைவாக மத்திய வங்கியின் பிணைகளின் பேரிலான வெளிநின்ற பொறுப்புக்கள் 1993 இறுதியின் ரூ. 21,550 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 37,400 இலட்சத்திற்கு உயர்வடைந்தன. தொடர்ச்சியான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மத்திய வங்கியை அதன் திறைசேரி உண்டியல் உடைமைகளை 1993 இறுதியின் ரூ. 39,490 இலட்ச மட்டத்திலிருந்து செத்தெம்பர் இறுதியில் ரூ. 310 இலட்சத்திற்கு குறைப்பதற்கு இயலச்செய்தன. எனினும் மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்

உடைமைகள் 1994 திசெம்பரில் ரூ. 50,930 இலட்சத்திற்கு அதிகரித்தமைக்கு அரசின் இறைத் தொழிற்பாடுகள் மோசமடைந்தமையே பெருமளவிற்குக் காரணமாகும்.

ஒதுக்குப் பணத்தின் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்தும் மேலதிக வழிமுறையொன்றாக மத்திய வங்கி அதன் குறுங்கால மீள் நிதியிடல் வசதியை நிறுத்திக்கொண்டது. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழான மீள்நிதியிடல் வசதி 1994 மாச்சு 31 ஆம் நாளிலிருந்து முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. எனினும் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் வேளாண்மைக் கடன்கள் தொடர்பாக புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தில் பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு அரசினால் வட்டி உதவிக் கொடுப்பனவு வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கப்பேலற்றலுக்கு முன்னான கடன் தொடர்பான ஏற்றுமதிக் கொடுகடன் மீள்நிதியிடல் வசதிகள் 1994 மே 31 ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டன. இம்மாற்றங்களின் விளைவாக மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட குறுங்கால மீள் நிதியிடல் 1993 திசெம்பர் இறுதியின் ரூ. 7,530 இலட்சத்திலிருந்து 1994 திசெம்பர் இறுதியில் ரூ. 720 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

இடருக்குள்ளான நிதிக் கம்பனிகளிலிருந்தான மீள்நிதியிடல் கோரிக்கைகளுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட அளவில் தொடர்ந்தும் கடன் வழங்கப்பட்டபோதும் மத்திய வங்கி நடுத்தர, நீண்டகால கொடுகடன் நிதியத்தின் கீழான புதிய கடன் வழங்கலைத் தவிர்த்துக்கொண்டது. இந்நோக்கத்திற்காக 1994 இல் ரூ. 2,630 இலட்சம் கொண்ட தொகை வழங்கப்பட்ட வேளையில் ரூ. 40 இலட்சம் கொண்ட தொகை மீளப்பெறுகைகளாக பெறப்பட்டன. இதன்விளைவாக நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியங்களின்கீழ் இடருக்குள்ளான நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடல் வசதிகளின் வெளிநின்ற மட்டம் 1993 இறுதியின் ரூ. 20,450 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 23,040 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. எல்லாமாக இவ்வனைத்து வழிமுறைகளும் குறுங்கால மற்றும் நடுத்தரகால கொடுகடன் நிதிய வசதிகள் ஆகிய இரண்டின் கீழுமான மொத்த வெளிநின்ற மீள் நிதியிடலை 1993 இறுதியின் ரூ. 49,030 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 33,760 இலட்சத்திற்கு குறைவடையச் செய்தன. இது கடன் இழப்பு ஏற்பாடுகளுக்கான ரூ. 2,710 இலட்சம் கொண்ட ஒதுக்கினைக் கழித்தபின்னர் ரூ. 12,560 இலட்சம் கொண்டதொரு வீழ்ச்சியாகும்.

உள்நாட்டுக் கொடுகடனைக் கட்டுப்படுத்தும் நோக்கில், வைப்புப் பொறுப்புக்கள் மீது மத்திய வங்கி அதியுயர் மட்டமான 15 சதவீதத்தில் ஒதுக்குத் தேவைப்பாட்டைப் பேணியது. எனினும் வர்த்தக வங்கிகள் அவற்றினது வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை அதிகரிப்பதற்கு ஊக்குவித்து ஒதுக்குப்பண வளர்ச்சியின் மீதான அழுத்தத்தைக் குறைப்பதற்காக வேண்டி வெளிநாட்டில் வைப்புச் செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு நாணய வைப்புக்களின் மீதான வீதத்திற்குக் நியதி ஏதுக்குத் தேவைப்பாடு 1994 பெப்புருவரி 18 ஆம் நாளிலிருந்து 5 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. உயர்ந்த நியதி ஒதுக்கு விகிதம் தொடர்ந்தமை பணப்பெருக்கி 1993 திசெம்பர் இறுதியின் 2.86 இலிருந்து 1994 திசெம்பரில் 2.84 இற்கு குறைவடையத் தூண்டியது.

**வட்டிவீதங்களில் அசைவுகள்**

*வெளிநாட்டு உட்பாய்ச்சல்களில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வேறுபாடு, அரச இறைத் தொழிற்பாடுகளில் மாற்றங்கள், மத்திய வங்கியின் பட்டியலில் திறைசேரி உண்டியல்கள் விரைவாக அகற்றப்பட்டமை என்பன இவ்வாண்டில் வட்டி வீதங்களில் குறிப்பிடத்தக்களவான விரைவான மாற்றங்களைத் தோற்றுவித்தன. 1993 இல் வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சலில் காணப்பட்ட அதிகரித்த தன்மை 1994 இன் முற்பகுதிவரை தொடர்ச்சியாகக் காணப்பட்டு உள்நாட்டுப் பணச் சந்தையில் குறிப்பிடத்தக்க திரவத்தன்மையை உருவாக்கியது. மத்திய வங்கியின் பட்டியலில் திறைசேரி உண்டியல் உடைமைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையின் காரணமாக மேலதிக திரவத் தன்மையை ஈர்ப்பதில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் ஈடுபடுவதற்கான மத்திய வங்கியின் திறமை மிகவும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதனால், மத்திய வங்கியின் சொந்தப் பிணைகள் ரூ. 6,350 இலட்சத்திற்கு வழங்கப்பட்டமை, மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் 1994 பெப்புருவரி இறுதியில் ரூ. 39,080 இலட்சத்தினால் குறைக்கப்பட்டமை ஆகிய நிகழ்வுகளுக்கு மத்தியிலும் சந்தையில் காணப்பட்ட மிகையான திரவத் தன்மையானது திறைசேரி உண்டியல்கள் மீதான சராசரி விளைவில் வீழ்ச்சி ஏற்பட வழிவகுத்தது. இதன் விளைவாக 3 மாத திறைசேரி உண்டியல்கள் மீதான சராசரி விளைவு ஆண்டின் தொடக்கத்தில் 18.09 சதவீதத்திலிருந்து 1994 பெப்புருவரி இறுதியில் 14.43 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் 6 மாத திறைசேரி உண்டியல் வீதம் 18.47 சதவீதத்திலிருந்து 14.88 சதவீதத்திற்கும் 12 மாத திறைசேரி உண்டியல் மீதான வீதம் 19.38 சதவீதத்திலிருந்து 15.63 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. இவை, இரண்டு மாத காலப்பகுதிக்குள் திறைசேரி உண்டியல்களின் சராசரி விளைவு ஏறத்தாழ 3.75 புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தமையினைப் பிரதிபலித்தன.*

*வட்டிவீதங்களில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி மாச்சு நடுப்பகுதி வரையும் தொடர்ந்தது. எனினும், 1994 மாச்சில் ரூ. 14,000 இலட்சம் பெறுமதி கொண்ட திறைசேரி உண்டியல்களின் புதிய வழங்கலும், இதேகாலப் பகுதியில் ரூ. 6,860 இலட்சம் பெறுமதிகொண்ட மத்திய வங்கிப் பிணைகளின் வழங்கலும் இக்கீழ்நோக்கிய போக்கினை கட்டுப்படுத்துவதற்கு உதவின. மேலும், ஏப்பிறலில் ரூ. 6,000 இலட்சம் பெறுமதி கொண்ட திறைசேரி உண்டியல்களும் மேயில் ரூ. 4,700 இலட்சம் பெறுமதி கொண்ட மத்திய வங்கிப் பிணைகளும் புதிதாக வழங்கப்பட்டமையானது வட்டிவீதங்கள் உறுதியாக மேல்நோக்கி உயரத் தூண்டுதலாக அமைந்தன. இதன் விளைவாக யூன் இறுதியில் 3 மாத திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவு வீதம் 15.39 சதவீதத்திற்கு உயர்வடைந்த வேளையில் 6 மாத, 12 மாத உண்டியல்கள் மீதான விளைவு வீதங்கள் முறையே 15.62 சதவீதத்திற்கும் 15.87 சதவீதத்திற்கும் உயர்வடைந்தன.*

*யூலையில் காணப்பட்ட அதிகரித்த திரவத்தன்மை நிலைமைகள் அதனைத் தொடர்ந்துவந்த மாதங்களில் வட்டிவீதங்களில் கீழ்நோக்கிய அசைவிற்கு இட்டுச் சென்றன. மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் இருப்புக்கள் குறைவடைந்தமை மத்திய வங்கியின் முதிர்ச்சியடையும் குறுங்காலப் பிணைகள் புதுப்பிக்கப்பட்டமை என்பன 1994 ஒற்றோபரில் 3 மாத திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவினை 11.58 சதவீதத்திற்கும் 12 மாத உண்டியல்களின் வீதத்தினை 12.20 சதவீதத்திற்கும்*

வீழ்ச்சியடையச் செய்தன. வெளிநாட்டு மூலதனங்களின் உட்பாய்ச்சல் வேகம் தணிந்தமை மற்றும் 1994 திசெம்பரில் அரசு அதன் காசுத் தேவைகளைச் சமாளிப்பதற்கு ரூ. 30,000 இலட்சம் கொண்ட திறைசேரி உண்டியல்களுக்குப் புதிய கேள்வியை ஏற்படுத்தியமை என்பவற்றைத் தொடர்ந்து ஆண்டின் இறுதி மாதங்கள் இரண்டிலும் இப்போக்கில் கடுமையான மாற்றம் காணப்பட்டது. 1994 இன் இறுதிக் காலாண்டில் மத்திய வங்கி நாணயக் கூட்டுக்களின் உயர் வளர்ச்சி வீதத்தினைக் குறைப்பதற்காக ரூ. 25,100 இலட்சம் கொண்ட அதன் சொந்தப் பிணைகளை வழங்குவதன் மூலம் அதனது திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைத் தீவிரப்படுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. 1994 திசெம்பரில் இக்காரணிகள் வட்டிவீதங்களில் கணிசமான உயர்வினைக் கண்டன. திசெம்பர் இறுதியில் 3 மாத திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவு 18.73 சதவீதத்திற்கு உயர்வடைந்தவேளையில் 6 மாத, 12 மாத வீதங்கள் முறையே 19.29 சதவீதத்திற்கும் 19.43 சதவீதத்திற்கும் உயர்வடைந்தன. எனினும் திறைசேரி உண்டியல்களின் விளைவு வீதங்களில் கணிசமான உயர்வு காணப்பட்ட போதிலும் மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்களின் உடைமைகள் ஒற்றோபர் இறுதியின் ரூ. 14,330 இலட்சத்திலிருந்து திசெம்பர் இறுதியில் ரூ. 50,930 இலட்சத்திற்கு அதிகரித்து ஒதுக்குப் பண விரிவாக்கத்திற்கு உலைவைத்தது. 1994 இல் திறைசேரி உண்டியல் சந்தையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அபிவிருதி யாதெனில் பலதடவைகளில் முதலாந்தரத் திறைசேரி உண்டியல் ஏலங்களில் மிகையாகப் பணம் செலுத்தப்பட்டமையாகும்.

இதேவேளை வங்கிகளுக்கிடையேயான அழைப்புப் பணச் சந்தை வீதங்களில் காணப்படும் மேலதிகத் தளம்பல்களை ஓரளவிற்குத் தடுக்கும் பொருட்டு 1993 ஒற்றோபரில் மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட மீள் கொள்வனவுச் சந்தை வட்டிவீதங்களில் காணப்பட்ட கடுமையான வீழ்ச்சிகளைத் தடுப்பதில் பொதுவாக வெற்றிகண்டது. எனினும் மத்திய வங்கி வசமிருந்த பட்டியலிடப்பட்ட உண்டியல்கள் தீர்ந்துவிட்ட சில சந்தர்ப்பங்களில் அழைப்புப் பண வீதங்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. 1993 திசெம்பர் இறுதியில் 16.50 – 18.50 சதவீத வீச்சில் விளங்கிய அழைப்புச் சந்தை வீதங்கள் மாச்சு இறுதியில் 0.50 – 15.00 சதவீதமான பரந்த வீச்சிற்குள் வீழ்ச்சியடைந்தன. சந்தை அபிவிருத்திகளுடன் இணைந்தவகையில் மத்திய வங்கியின் ஒருநாள் மீள் கொள்வனவு விளைவு வீதமும் 1993 இறுதியின் 16.5 சதவீதத்திலிருந்து மாச்சு இறுதியில் படிப்படியாக 12.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. ஒருநாள் மீள் கொள்வனவு வீதம் செத்தெம்பர் நடுப்பகுதிவரை சிறு மாற்றங்களுடன் இம் மட்டத்தில் பேணப்பட்டது. இவ்வேளையில் அழைப்புப் பண வீதங்கள் மிகவும் குறைவான மட்டத்தை அடைந்ததுடன் இதன் காரணமாக ஒரு நான் மீள் கொள்வனவு வீதம் ஒற்றோபர் நடுப்பகுதியில் 7.00 சதவீதத்திற்குப் படிப்படியாகக் குறைக்கப்பட்டது. அழைப்புச் சந்தை வீதங்கள் செத்தெம்பர் நடுப்பகுதியில் 04.00 – 08.00 சதவீத வீச்சில் காணப்பட்டனவெனினும் ஒற்றோபர் இறுதியில் 12.25 – 13.50 சதவீத வீச்சிற்குப் படிப்படியாக உயர்வடைந்தன. ஆண்டின் கடைசி இரண்டு மாதங்களிலும் சந்தைத் திரவத்தன்மை குறைவடைந்திருந்தமை அழைப்புப் பணச் சந்தையில் வட்டி வீதங்கள் நவெம்பர் இறுதியின் 13.00 – 17.00 சதவீத வீச்சிலிருந்து திசெம்பர் இறுதியில் 20.00 – 23.00 சதவீத வீச்சிற்கு உயர்வடைந்தமையில் பிரதிபலிக்கப்பட்டது. மத்திய வங்கியின் ஒருநாள் கொள்வனவு வீதமும் நவெம்பர் இறுதியில் 13.75 சதவீதத்தினையும் திசெம்பர் இறுதியில் 20.00 சதவீதத்தினையும் அடையும் வகையில் அதிகரிக்கப்பட்டது.

தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புக்கள் மீது வழங்கப்பட்ட வட்டி வீதங்கள் ஆண்டு முழுவதும் 14.00 சதவீதமாக மாற்றமின்றியிருந்தன. 16.00 – 17.00 சதவீத வீச்சில் காணப்பட்ட நிலையான வைப்புக்கள் மீது வழங்கப்பட்ட வீதங்கள் திசெம்பரில் இவ்வீதங்கள் 14.00 வீதத்திற்குக் குறைக்கப்படும்வரை இதே மட்டத்திலேயே பேணப்பட்டன. 1993 இன் இறுதிப் பகுதியில் வீழ்ச்சியடையத் தொடங்கிய வர்த்தக வங்கிகளின் வைப்பு வீதங்கள் 1994 இல் தொடர்ந்தும் வீழச்சியுற்றன. வர்த்தக வங்கிகளின் தவணை வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள் 1993 இறுதியின் 10.00 – 19.00 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் 1994 இறுதியில் 8.00 – 18.25 சதவீத வீச்சிற்கிடையே வேறுபட்ட வேளையில் சேமிப்பு வைப்புக்கள் மீதானவை 1993 இன் 6.00 – 15.0 சதவீதத்திற்கெதிராக 5.5 – 13.0 சதவீத வீச்சில் விளங்கின. இவ்வபிவிருத்திகளைப் பின்பற்றி சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் 1993 திசெம்பர் இறுதியின் 13.6 சதவீதத்திலிருந்து 1994 திசெம்பர் இறுதியில் 12.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதன்விளைவாக வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதமும் 1993 இறுதியின் 20.4 சதவீதத்திலிருந்து 1994 ஒற்றோபர் இறுதியில் 16.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததெனினும் திறைசேரி உண்டியல்களின் விளைவு வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இணைந்து ஆண்டின் இறுதியில் 17.8 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. அதேவேளை குறுங்கால வீதங்களின் பொதுவான கீழ்நோக்கிய போக்கினைப் பின்பற்றி நீண்டகால வீதங்கள் பொதுவாக 1993 இனைவிட 1994 இல் குறைவாகக் காணப்பட்டன. 3–5 ஆண்டு முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட அரச பிணைகளுக்கான வட்டி வீதங்கள் 1993 இன் 16.0–17.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 14.0–16.0 சதவீதமாக விளங்கின. 6 வருட மற்றும் 7 வருட முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட நீண்டகால ரூபாப் பிணைகளும் 14.00 – 15.75 சதவீத வீச்சிலான வட்டிவீதத்தில் இக்காலப் பகுதியில் வழங்கப்பட்டன.

### பிரச்சினைகளும் கொள்கைகளும்

செலாவணி மற்றும் வர்த்தகக் கட்டுப்பாடுகளின் தற்போதைய தாராளமயமாக்கலில் 1994 இல் மேலும் முன்னேற்றம் காணப்பட்டது. பன்னாட்டு நாணய நிதியத்தின் உறுப்புரை VIII இன் கடப்பாடுகளை ஏற்றுக்கொண்டதுடன் நடைமுறைக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான செலாவணிக் கட்டுப்பாடுகள் 1994 மாச்சில் முற்றாக நீக்கப்பட்டமையானது செலாவணிக் கட்டுப்பாடுகளைத் தாராளமயமாக்கல் மற்றும் இலங்கை ரூபாவை முழுமையாக மாற்றத்தக்கதாக்குதல் ஆகியவற்றை நோக்கிய தொடர்ச்சியான அண்மைக்கால முன்னேற்றங்களில் ஒரு மைல் கல்லாகும். உறுப்புரை VIII இன் கடப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் காரணமாக அனைத்து நடைமுறைப் பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகவும் இலங்கை ரூபா எவ்வித கட்டுப்பாடுமின்றி மாற்றத்தக்கதொன்றாக மாறியது. நடைமுறைப் பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் மாற்றல்கள் மீதான கட்டுப்பாடுகளைப் பயன்படுத்தும் தேவையினை ஒழித்துவிடக்கூடிய வலுவான பொருளாதாரக் கொள்கைகளை அரசு பின்பற்றும் என உறுப்புரை VIII இன் கடப்பாடுகள் கருதுகின்றன. கட்டுப்பாட்டின் கீழ் இருந்த எஞ்சிய விடயங்களில் பெரும்பாலானவை தொடர்பான இறக்குமதி உரிமத் தேவைப்பாடுகளும் 1994 இல் அகற்றப்பட்டன. மொத்தமாக, இலங்கையின் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நலத்துறை, பாதுகாப்பு, சுற்றாடல் காரணங்கள்

போன்ற இன்றியமையாத வரையறுக்கப்பட்ட விடயங்களுக்கே தற்பொழுது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, ஏனைய துறைகளின் அமைப்புச் சீராக்கங்கள் 1994 இல் இடம்பெற்ற இரு தேசிய தேர்தல்களின் பின்னணியில் பின்னடைவினைக் கொண்டிருந்தன. இவ்வாண்டில் வரிச் சீர்திருத்தம் தனியார்மயமாக்கல், நிதியியல் துறைச் சீர்திருத்தம் என்பனவற்றில் சிறிதளவு முன்னேற்றம் காணப்பட்டது. பொருட்கள் மற்றும் பணிகள் வரிக்குச் சீராக, சுமுகமாக மாற்றமுறுவதற்கு வசதியளிக்கு முகமாக அண்மைய ஆண்டுகளில் மொத்த விற்பனை வரியை ஒழுங்குமயமாக்குவதனை நோக்கிச் செய்யப்பட்ட முன்னேற்றங்கள், இவ்வாண்டில் பரந்தளவு பொருட்களுக்கு வழங்கப்பட்ட விதிவிலக்குகள் மற்றும் வரி வீதக் குறைப்புக்களின் காரணமாகத் தடைப்பட்டுள்ளன.

சுங்கத் தீர்வை சீரமைப்புக்களைப் பொறுத்தவரையில் குறிப்பிடத்தக்க தளர்வுகள் அவதானிக்கப்பட்டன. 10,20, 35 மற்றும் 45 சதவீதங்களைக் கொண்ட நான்கு பிரிவு வீத அமைப்புக்களுடன் 1993 நவெம்பரில் சுங்கத் தீர்வைகள் ஒழுங்கமுறைப்படுத்தப்பட்டபோதும், தீர்வைத் தளர்த்தல்கள் மற்றும் விலக்கல்கள் வழங்கப்பட்டமையும் 5 சதவீதப் பிரிவு உருவாக்கப்பட்டமையும் புதிய தீர்வை அட்டவணையை கடுமையான சிக்கலுக்குட்படுத்தின. அரசின் அரசிறையில் ஏற்பட்ட கணிசமான இழப்புக்கள் தவிர ஒரே சீராக அமையவேண்டிய தாக்கமான பாதுகாப்புத் தன்மையினைப் பொறுத்தவரையில் குறிப்பிடத்தக்க திரிபுகளை விளைவித்தன. பருப்புவகை போன்ற விடயங்களைச் சுங்கத் தீர்வையிலிருந்து முற்றாக விலக்கியமையானது அதையொத்த உற்பத்திகளில் ஈடுபடும் உள்நாட்டு வேளாண்மையாளர்களை பன்னாட்டு விலைகளுடன் போட்டியிடவைத்தது. இதேபோன்று முடிவுபெற்ற உற்பத்திகளின் மீது உயர்ந்த தீர்வையினைப் பேணிய அதேவேளையில் பல்வேறுபட்ட மூலப்பொருட்கள் மற்றும் உதிரிப் பாகங்களின் சுங்கத் தீர்வையை குறைத்தமையும், விலக்கியமையும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மூலப் பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்களுக்கு தீர்வை அமைப்பு பாதுகாப்பு எதனையும் வழங்காததைப் புலப்படுத்தியதுடன் இதன் காரணமாக கைத்தொழில் அபிவிருத்தியில் பின்தங்கிய தொடர்பூட்டல்களுக்கான ஊக்குவிப்பு அமைப்பினையும் குறைத்துவிடுகின்றது.

அரசதுறைத் தொழில் நிலையைப் பொறுத்தவரையில் கொள்கை நியதியிலும் சில தளர்த்தல்கள் காணப்பட்டன. வெற்றிடங்களை நிரப்புவதனை நிறுத்தி வைத்தலும் தற்போதுள்ள தொழில்நிலை வெற்றிட நிலைமைகளை ஒழுங்குமுறைப்படுத்தலும் அண்மைய ஆண்டுகளில் அரசதுறைச் சீராக்கங்களின் கொள்கை உத்திகளைத் தெளிவாகக் கொண்டிருந்தபோதிலும் தேசிய தேர்தல்களின்போது 8,000 பட்டதாரிகளுக்கு தொழிலும் அரசதுறையிலுள்ள அனைத்து அமைய ஊழியர்களுக்கும் நிரந்தரப் பதவியையும் வழங்குவதற்கு அரசு தீர்மானித்தது. இத்தீர்மானங்கள் அரசதுறைத் தொழில் நிலையைப் பொறுத்தவரையில் நியாயப்படுத்தும் முயற்சியைப் பாதிப்படையச் செய்தது. அனைத்துப் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கும் கணிசமான சம்பள அதிகரிப்பினை வழங்க அரசு தீர்மானித்தது. எனினும் அத்தீர்மானங்களின் நிதியியல் செலவு எதிர்வரும் வரவு செலவுத் திட்டங்களிலேயே உணரப்படும்.

நலன்புரிச் செலவினத்தை இலக்காகக் கொண்ட கொள்கை உத்தியிலும் 1994 இல் எதிர் மாற்றம் காணப்பட்டது. பள்ளிக்கூட நண்பகல் உணவு நிகழ்ச்சித் திட்டத்தினை உணவு முத்திரை பெறும் குடும்பங்களுக்கு கட்டுப்படுத்துவதென்ற தீர்மானம் 1994 மேயில் மாற்றப்பட்டது. இதன்விளைவாக இந்நிகழ்ச்சித் திட்டத்தின் ஆண்டுச் செலவு வரவு செலவுத் திட்டத்தில் இலக்கிடப்பட்ட ரூ. 9,000 இலட்சத்திலிருந்து ரூ. 23,000 இலட்சத்திற்கு அதிகரித்தது. 1994 இல் முடிவடைவதற்கு அட்டவணையிடப்பட்டிருந்த சனசக்தி 5 ஆவது சுற்றின் நடைமுறைப்படுத்தல் முன்னமேயே முடிக்கப்பட்டதுடன் வருமான மாற்றல்கள் முறையாக இலக்கிடப்படாது 5 ஆவது சுற்றின் கீழ் வந்த அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டன.

ஆண்டின் இறுதிப்பகுதியில் நிருவகிக்கப்பட்ட விலைகள் தொடர்பான கொள்கை நியதிகளிலும் மாற்றங்கள் காணப்பட்டன. வலுத்துறை மீதான முதலீட்டிலிருந்து போதுமானளவு வருவாயை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டு அண்மைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மின் தீர்வைத் திருத்தங்கள் அதிகரிக்கும் தீர்வைகளைக் குறைக்கும் தீர்மானத்தினால் எதிர்மாறான விளைவினைக் கொண்டிருந்தன. நிருவகிக்கப்பட்ட விலைத் திருத்தங்களைக் கொண்டு பல்லாண்டுகளாக உற்பத்திச் செலவின் மட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட கோதுமை மாவின் விலை 1994 யூலையில் கி. கிறாமிற்கு ரூ. 1.50 ஆலும், மீண்டும் 1994 ஓகத்து பிற்பகுதியில் கி. கிறாமிற்கு ரூ. 4.35 இனாலும் குறைக்கப்பட்டது. இது அரிசி போன்ற உள்நாட்டு பதிலீடுகளின் உற்பத்தியாளர் விலைகள் மீதும் அரசின் வரவு செலவுத் திட்டத்தின் மீதும் பாதகமான விளைவுகளைக் கொண்டிருந்தது. மண்ணெண்ணெய் மற்றும் டீசலுக்கான நிருவகிக்கப்பட்ட விலைகளிலும் குறைப்புக் காணப்பட்டது. பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் விலை அமைப்பினை இது மேலும் திரிவுபடுத்தியது. இவ்விலைத் திரிபுகளினால் டீசலின் நுகர்வு அதிகரித்தது. டீசலின் சார்பு ரீதியான விலை அனுகூலம் காரணமாக இது தற்போது ஆண்டிற்கு 10 சதவீதத்தினால் வளர்ச்சியடைகின்றது. இது அரசின் வரவு செலவுத் திட்டத்தின் மீது மட்டுமன்றி நாட்டின் இறக்குமதிகள் மீதுகூட சிக்கல்களைக் கொண்டுள்ளது. வளமாக்கிக்கான உயர்ந்த பன்னாட்டு விலைகள் காணப்படுகின்ற இந்நிலையில் 1994 ஒற்றோபரில் வளமாக்கியின் மீது 30 சதவீதம் கொண்ட உதவுதொகை அறிமுகப்படுத்தப்பட்டமை உள்நாட்டு உணவு விலைகளில் குறிப்பிடத்தக்க விலைத் திரிபுகளை ஏற்படுத்துவது மட்டுமன்றி கோதுமைமா, பாண் மற்றும் வளமாக்கி என்பன மீதான உதவுதொகைகள் 1995 இற்கான மொ.உ.உற்பத்தியில் ஏறத்தாழ 1 சதவீதம் கொண்ட செலவினையும் ஏற்படுத்துமென மதிப்பிடப்பட்டதுடன் இது இறைச் சீராக்கங்களை மேற்கொள்வதனை மேலும் கடினமாக்கும்.

1994 இல் அமைப்புச் சீராக்கங்களில் குறிப்பிடத்தக்க தளர்வு காணப்பட்டமையை மேற்குறிப்பிட்ட விடயங்கள் காட்டின. பொருளாதார சீர்திருத்தங்களைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தல் குறுங்கால மக்கள் நலக்கொள்கைகளால் புறக்கணிக்கப்பட்டது. இவ்வழிமுறைகள் நுகர்வோருக்கு குறுங்கால நன்மைகள் சிலவற்றினை வழங்கின என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். எனினும் இத்தகைய வழிமுறைகளினால் மக்களின் வருமானத்தையும் தொழில் வாய்ப்புக்களையும் முன்னேற்ற முடியும் என்பதும் இறுதியில் உறுதியான அடிப்படையில் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியையும் மக்களின் நன்னிலையையும் பேணுதலென்பதும் மிகக் கவனமாக ஆய்வினை வேண்டிநிற்கும் விடயமாகும்.

நிருவகிக்கப்பட்ட விலைகள், வரிவிலக்குகள் மற்றும் நேரடி வரவு செலவுத் திட்டக் கொடைகள் என்பனவற்றின் மூலமான பல்வேறுபட்ட நிவாரண வழிமுறைகளை வழங்குதல் அரசின் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை மேலும் அதிகரிக்கின்றது. வரவுசெலவுத்திட்ட செலவுகள் எஞ்சியுள்ள வரித்தளத்தின் மீது உயர்ந்த வரிவிதிப்புக்களை வேண்டி நிற்கின்றன; அல்லது உயர்ந்த பணவீக்கத்தையும் உயர்ந்த வட்டி வீதங்களையும் இறுதியில் தோற்றுவிக்கின்றன. இத்தகைய வழிமுறைகள் உற்பத்தியையும் ஏற்றுமதியையும் ஊக்கமிழக்கச் செய்து, நுகர்வையும் இறக்குமதிகளையும் ஊக்குவிப்பதன் விளைவாக தொழில் வாய்ப்புக்களையும் மக்களின் பொது நன்மைகளையும் குறைத்துவிடுகின்றன.

பொருளாதாரக் கொள்கைச் சீரமைப்பின் பிரதான நோக்கம், உறுதியான அடிப்படையில் விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைவதேயாகும். சரியான பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றுவதன் மூலமாகவே பங்கீட்டுக் குறிக்கோள்களுடனும் மக்களின் நலன்களுடனும் ஒன்றிணைந்த விரைவான வளர்ச்சியை அடையமுடியும் என்பதற்கு உயர்ந்த செயலாற்றங்கள் மிக்க ஆசிய பொருளாதாரங்கள் சான்று பகர்கின்றன. உயர்ந்த செயலாற்றத்தினைக் கொண்ட பொருளாதாரங்களில் காணப்பட்ட விரைவான முன்னேற்றமும் இவ்விடயத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் வளர்ச்சி, சமநிலை இரண்டிலும் எதனையும் விட்டுக்கொடுக்க முடியாது என்பதனையும் வளர்ச்சியானது பெரும்பாலும் கொள்கைகளினால் நிர்ணயிக்கப்படுகையில் வறுமைக்கும் இதுவே ஏற்படுகின்றது என்பதனையும் மிகத் தெளிவாகப் புலப்படுத்தியிருக்கின்றன. எனவே, பொருளாதாரக் கொள்கையினை எதிர்நோக்கும் கேள்வி என்னவெனில் வளர்ச்சி, சமநிலை இரண்டிலும் எதனை விட்டுக்கொடுப்பது என்பதல்ல. ஆனால் வளர்ச்சியானது வறுமையையும் வருமான சமமின்மையையும் குறைப்பதை உறுதிப்படுத்துவது எப்படி என்பேதயாகும். தொழில்வாப்பினை உருவாக்கும் பரந்த அடிப்படையிலான உறுதியான பொருளாதார வளர்ச்சியே வறுமை மற்றும் வருமான சமமின்மையை விரைந்து குறைப்பதற்கான திறவுகோலாகவுள்ளது என்பதில் பரந்தளவிலான கருத்தொருமைப்பாடு இன்று தோன்றியிருக்கின்றது. அத்தகைய வளர்ச்சிக்குரிய உத்திகளின் முக்கிய பண்புகள் மதிநுட்பம் மிக்க பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள், ஏற்றுமதி சார்ந்த உற்பத்தி, அதிகரித்த தனியார் துறைப் பங்களிப்பு, நெகிழ்ச்சி மிக்க தொழிலாளர் சந்தை, வினைத்திறன்மிக்க நிதியியல் முறை, மற்றும் வலுவான உட்டகட்டமைப்புத் தளம் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

பொருளாதார வளர்ச்சியானது திடமான பேரண்டப் பொருளாதார சூழ்நிலையினாலும் வழங்கல் நிலைமைகளை அதிகரிப்பதற்கான கொள்கைகளினாலும் ஆதரவளிக்கப்பட்டிருத்தல் வேண்டும். சந்தை சார்ந்த வடிவமைப்பினுள் பொருளாதார தீர்மானங்களின் முன் மதிப்பீட்டினை முன்னேற்றும் திடமான பேரண்டப் பொருளாதார சூழ்நிலையே சேமிப்புக்களையும் முதலீட்டினையும் ஊக்குவிக்கின்ற அவசியமான நிலைமைகளாக உள்ளது. உறுதியற்ற பேரண்டப் பொருளாதார நிலைமைகள் உயர்ந்த வீத பணவீக்கங்களினூடாக அதன் பாதகமான தாக்கங்களைப் பரப்புவது மட்டுமன்றி, உறுதியற்ற தன்மையானது வினைத் திறன் மிக்க மூலவள ஒதுக்கத்தினைக் குறைத்து முதலீடுகளைக் குறைவடையச் செய்வதுடன் உற்பத்தியாற்றலின் வளர்ச்சி வீதத்தையும் குறைத்துவிடுவதனால் பொருளாதார வளர்ச்சியை நேரடியாகக் குறைத்துவிடுகின்றது. சந்தைப் பொறியமைப்பின்

வினைத்திறன் மிக்க தொழிற்பாடு மற்றும் தனியார் துறையில் சிநேகபூர்வமான பெருளாதார சூழ்நிலையை உருவாக்கல் என்பனவற்றிற்குத் தடையாகவுள்ள பல்வேறு தடைகளை அகற்றுவதற்கு அமைப்புச் சீராக்கங்கங்கள் அவசியமாக உள்ளன. வர்த்தகத் தடைகள், உற்பத்தி வளர்ச்சித் தடைகள் சொத்துரிமைகளில் வரையறைகள் வர்த்தகத் தொழில் முயற்சிகளில் தனியார் துறை உடைமைகளின் செல்வாக்கு, உட்கட்டமைப்புக் குறைபாடுகள் மற்றும் நிறுவன ரீதியான நெகிழ்ச்சியற்ற தன்மை போன்ற பல்வேறுபட்ட தடைகளை சீராக்கங்கள் அகற்றிவிடுமெனக் கருதப்படுவதனால் அத்தகைய சீராக்கங்கள் பொருளாதாரத்தின் வழங்கல் நிலைமையையும் மூலவள ஒதுக்கத்தின் வினைத் திறனையும் உறுதிப்படுத்தக்கூடியதாக இருக்கும். எனவே அமைப்புச் சீராக்க உந்து விசையானது சந்தைத் தத்துவங்களினால் வழிநடத்தப்பட்ட விரைவான பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும் நிலைமைகளை உருவாக்குமொன்றாக உள்ளது.

விலை உறுதிப்பாடு பேரண்டப் பொருளாதாரக் கொள்கையின் மிக முக்கிய குறிக்கோளாகும். முன்னைய ஆண்டறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டவாறு, அண்மைய ஆண்டுகளில் இலங்கையில் உயர்ந்த பணவீக்கத் தாக்கம் தொடர்ச்சியாகக் காணப்படுவதற்கு (அ) உயர்ந்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை (ஆ) பண நிரம்பலில் ஏற்பட்ட உறுதியான வளர்ச்சி (இ) குறைந்த உற்பத்தியாக்கம் (ஈ) பணவீக்க எதிர்பார்ப்புக்கள் என்பனவே காரணங்களாகும். இலங்கையில் இறைச் சமமின்மைகள் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கான விரும்பத்தக்க மட்டத்தினைவிட மிகக் கூடுதலாக இருந்தன. கடந்த அண்மைக் காலத்தில் பல ஆண்டுகளாக வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையைக் கொண்டிருக்கின்றமை அரச இறைத் தொழிற்பாடுகளில் காணப்படும் உயர்வான நுகர்வு சார்ந்த தன்மையைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. 1989 – 1994 காலப்பகுதியில் சராசரி வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை மொ. உ. உற்பத்தியில் ஏறத்தாழ 10.0 சதவீதமாக இருந்ததுடன் உள்நாட்டுக் கடன்பாடுகள் மொ. உ. உற்பத்தியில் ஏறத்தாழ 5.0 சதவீதமாக விளங்கின. உள்நாட்டுப்படுகடனை உருவாக்குவதன் மூலம் பற்றாக்குறையை நிதியிடுவது வரவு செலவுத் திட்டத்தின்மீது உயர்ந்த படுகடன் சுமையைத் தோற்றுவிக்கின்றது. நாட்டில் தற்போது நிலவுகின்ற உயர்ந்த வட்டிவீத அமைப்பினைப் பாதிக்கின்ற முக்கிய காரணிகளிலொன்றாக அரசின் உயர்ந்த உள்நாட்டுக் கடன்பாடு விளங்குகின்றது. அரசு உள்நாட்டுக் கடன்பாடுகளில் பெருமளவிற்குத் தங்கியிருக்கின்றமையானது தனியார் துறைக்குக் கிடைத்திருக்கக்கூடிய மூலவளங்களை அரசு முதலில் பெற்றுக்கொள்ளும் தன்மையைக் கொண்டிருப்பதால் நாட்டின் வளர்ச்சிக்கான உள்ளார்ந்த வளம் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதனைக் கட்டுப்படுத்துகின்றது. பொருளாதாரச் சீர்திருத்தங்களால் தூண்டப்பட்டதன் மூலம் கிடைத்த பெருமளவு மூலதன உட்பாய்ச்சல்கள் மற்றும் தனியார் துறையின் உயர்ந்த கொடுகடன் தேவைகள் என்பனவற்றின் பின்னணியில், உயர்ந்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைகள் விலை உறுதிப்பாட்டுடன் இணைந்த விதத்தில் திரவத்தன்மை மட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நாணயக் கொள்கை முயற்சிகளை விரக்தியடையச் செய்துவிடுகின்றன.

இலங்கையில் மதிநுட்பமான பேரண்டப் பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றுதல் என்பது வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைகளைக் குறைப்பதற்கான வலுவான இறை நடவடிக்கைகளை வேண்டிநிற்கின்றது. அத்தகைய நடவடிக்கைகள்

குறுங்காலத்தில் அரசிறையைப் பெருக்குகின்ற வழிமுறைகளையும் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் கொள்கைகளையும் உள்ளடக்குகின்றபோதும் நாட்டில் காணப்படும் பேரண்டப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு நீண்டகாலம் நன்மைபயக்கக் கூடிய அமைப்புச் சீராக்கங்கள் அவசியமானதாகவுள்ளன. பொதுவாக உயர்ந்த அரசிறை முயற்சிகள் காணப்பட்டபோதும், அண்மைய ஆண்டுகளில் அரசு ஒரு நெகிழ்ச்சித் தன்மைமிக்க அரசிறை அமைப்பினைப் பேணமுடியாமல் போனமைக்கு வரித் தளத்தில் குறிப்பிடத்தக்க தேய்வினை உண்டுபண்ணிய பல்வேறுபட்ட வரிச்சலுகைகள், விலக்குகள், அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட வரித் தளர்த்தல்கள் என்பன வழங்கப்பட்டமையே காரணமாகும். வரி அமைப்பில் காணப்படும் குறிப்பிடத்தக்க சிக்கல் நிறைந்த தன்மைகளும் வரி நிருவாகம் முன்னேற்றமடைவதற்கு உதவவில்லை. அரசிறை/மொ.உ. உற்பத்தி விகிதம் 1989 இன் 21.4 சதவீதத்திலிருந்து 1994 இல் 19.0 சதவீதத்திற்குக் கிரமமாக வீழ்ச்சியடைந்தமையானது நாட்டின் அரசிறை முறையிலுள்ள இந்நலிவுற்ற தன்மையை வலியுறுத்துவதாயுள்ளது. எனவே இலகுவான பரந்த தளத்தைக் கொண்ட வரி அமைப்பினை நோக்கிய கொள்கைச் சீராக்கங்களைப் பின்பற்றுவது அவசியமானதாகும். இது அரசிறையில் நெகிழ்ச்சித் தன்மையைக் கட்டியெழுப்புவதையும் வரி செலுத்த இணங்குவதனையும் வரி நிருவாகத்தை வசதிப்படுத்துவதனையும் முன்னேற்றும்.

அரசின் செலவினத்தில் நடைமுறைச் செலவின் அமைப்பு மிக்க கவலைக்குரியதாகவுள்ளது. சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் மீதான செலவினம் நடைமுறைச் செலவினத்தில் மூன்றிலொருபங்கிற்கு வகைகூறுகின்றது. சம்பள அதிகரிப்புக்கள் தவிர, அரச தொழில் நிலையும் தொடர்ந்து விரிவடைவதன் காரணமாக அரச சம்பளங்கள் மீதான செலவினம் அதிகரித்துள்ளது. முகாமைத்துவ வகைகளுக்கான சம்பள அமைப்பானது அண்மைய சீராக்கங்களின் கீழ் கணிசமான சம்பள அதிகரிப்புக்களைப் பெற்ற மற்றைய வகைகளுடன் முற்றுமுழுதாக இணைந்திராத வேளையில் கூலிகளின் மீதான செலவு அதிகரித்தமைக்கு கீழ்மட்ட அரசதுறைப் பணிகளின் அதிகரிப்பே காரணமாகும். அதேவேளை அதிகரித்த ஆயுட்காலம் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் அதிகரிக்கும் ஓய்வூதியம் பெறுவோரின் பெருமளவு எண்ணிக்கை என்பனவற்றின் காரணமாக 1990 இற்கும் 1994 இற்குமிடையில் அரச ஓய்வூதியங்கள் மற்றும் இளைப்பாறல் நன்மைகள் என்பனவற்றின் மீதான செலவு மூன்று மடங்கு அதிகரித்தது. இவ்விடயத்தைப் பொறுத்தவரையில் அரசின் வரவு செலவுத்திட்டத்தின் மீதான சுமையைக் குறைப்பதற்கு அரசதுறைத் தொழில் நிலைக் கொள்கைகள் மற்றும் ஓய்வூதியத் திட்டங்களின் மீது கவனம் செலுத்துவது முக்கியமானதாகும்.

இறைச் சீர்திருத்தத்தில் கவனத்தை வேண்டி நிற்கும் இன்னுமொரு முறையாக நடைமுறைச் செலவினத்தில் ஏறத்தாழ 22 சதவீதத்திற்கு வகைகூறும் நலன்புரிச் செலவினம் விளங்குகின்றது. வரவு செலவுத் திட்டத்தின் மீதான உயர்ந்த செலவு தவிர, வருமான மீள் பங்கீட்டின் மீது விரும்பத்தக்க பயனை உருவாக்குவதற்கு, நன்கு இலக்கிடப்பட்ட நலன்புரி நிகழ்ச்சித் திட்டத்திற்குள் நலன்புரிச் செலவினத்தை ஒழுங்குமுறைப் படுத்துவது அவசியமானதாகும். நாட்டிலுள்ள எல்லாக் குடிமக்களுக்கும் நலன்புரியை வழங்குதல் செலவினத்தின் அத்தகைய நலன்புரி வழிமுறைகள் தேவைப்படாதோரைப் பொறுத்தவரை மூலவள விரயத்திற்கு இட்டுச்செல்லுகின்றது. மேலும் நன்கு இலக்கிடப்பட்ட நலன்புரி நிகழ்ச்சித்

திட்டமொன்று இதே வரவு செலவுத்திட்ட கட்டுப்பாடுகளுக்குள் தேவையானவர்களுக்கு மாத்திரம் அதிகரிக்கப்பட்ட வருமான மாற்றல்களை வழங்குவதற்கு அரசினை இயலச் செய்யும். நாடளாவிய உதவுதொகைக்கான தேவையை ஒழிப்பதற்கு விலைச் சீர்திருத்தங்களூடான தனியொரு வருமான மாற்றல் திட்டம் போதுமானதாகும்.

இலங்கை அதன் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கும் ஆற்றல்மிக்க இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்களை அதிகரிப்பதற்குமான அதன் வர்த்தக சீராக்கங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடைந்துள்ளது. தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் தீர்வைச் சீர்திருத்தங்களும் ஏற்றுமதி, இறக்குமதி மீதான உரிமத் தேவைப்பாடுகள் அகற்றப்பட்டமையும் அண்மைய ஆண்டுகளில் உந்து விசையைக் கொண்டிருந்த ஏற்றுமதி சார்ந்த மற்றும் உள்நாட்டுக் கைத்தொழில்களிலான முதலீட்டினை ஊக்குவித்துள்ளன. தாராளமயமாக்கப்படாத வேளாண்மைத்துறையில் இது காணப்படவில்லை. உள்நாட்டு வேளாண்மையிலுள்ள உள்ளார்ந்த வளத்தினை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வதற்காக பாதுகாப்பினையும் ஊக்குவிப்பு அமைப்பினையும் உருவாக்குவதற்கு பொருத்தமான தீர்வை அமைப்பினைப் பயன்படுத்துவதும் மிக முக்கியமானதாகும். தற்பொழுது தீர்வை அமைப்பு மிகவும் திரிபடைந்து காணப்படுகின்றது. கோதுமைமா, பருப்புவகை போன்ற பெருந்தொகையான வேளாண்மைப் பொருட்கள் சுங்கத்தீர்வைக்கு உட்படாதிருந்தமையானது அவற்றின் பதிலீட்டுப் பொருட்களின் உள்நாட்டு உற்பத்திகளினது சார்பு ரீதியான விலைகளில் பாதகமான தன்மைகளை ஏற்படுத்தின. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட கோதுமைமா உதவுதொகையும் உள்நாட்டு உற்பத்திகளிலிருந்து நுகர்வோர் முன்னுரிமைகளை மாறச் செய்து, வேளாண்மையில் காணப்பட்ட சார்புரீதியான விலைகளை திரிபடையச் செய்தன. இத் திரிபுகளைத் திருத்துவதும் சரியான விலைக்குறிகாட்டிகளை மீளக் கொண்ர்வதும் குறுங்காலத்தில் வாழ்க்கைச் செலவினை குறிப்பாக நகரப் பகுதிகளினதைப் பாதிக்குமெனினும் நாட்டின் உணவு உற்பத்தியை ஊக்குவிப்பதனை கவனத்திற்கொண்டு அவற்றை மேற்கொள்ளவேண்டும். இலங்கையில் வறிய மக்களில் பெரும்பான்மையானோர் கிராமப் பகுதிகளில் முக்கியமாக வேளாண்மை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதனால் விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் வறுமையை ஒழிப்பதற்குமான பொருளாதார சீர்திருத்தங்கள் உள்நாட்டு வேளாண்மையிலுள்ள தாழ்ந்த உற்பத்தியாற்றலுடன் தொடர்பான பிரச்சினைகளை தீர்த்துவைக்க வேண்டியது அவசியமாகும். உள்நாட்டு வேளாண்மையின் உற்பத்தியாற்றலை அதிகரிப்பதற்கு இப்பிரேதசங்களில் மூலதனம், தொழில்நுட்பம், பயிரிடலில் நவீன முறைகள் என்பனவற்றை உட்புகுத்துவதும் சந்தை வலையமைப்பினை விரிவடையச் செய்வதும் அவசியமானவைகளாகும்.

வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகளில் உள்ள உற்பத்தி நடவடிக்கைகளில் தனியார்துறையின் பங்கேற்பானது நிலப்பயன்பாடு, நெகிழ்ச்சியற்ற தொழிலாளர் சந்தைநிலைமைகள், பெருமளவு அரச தொழில் முயற்சிகளில் குறிப்பாக உட்கட்டமைப்பு மற்றும் பணிகள் துறையில் அரசின் உடைமை, உட்கட்டமைப்பு வசதிகளின் பற்றாக்குறை, ஊழியர் சேமநிதியம் போன்ற நிறுவனமயப்படுத்தப்பட்ட முதலீட்டாளர்களிடமிருந்தான அரசின் மிகையான கடன்பாடு என்பன மீது தற்போது நிலவும் கொள்கைகளினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நீண்டகால முதலீட்டில் மிக முக்கிய மூலமாகச்

சொத்துரிமைகள் விளங்குவதனால் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் உள்நாட்டு மற்றும் பெருந்தோட்ட வேளாண்மையில் தனியார்துறையின் முதலீட்டினை ஊக்குவிப்பதற்குத் தேவையான நெகிழ்ச்சித் தன்மைகளை அறிமுகப்படுத்தும் பொருட்டு சொத்துடைமையைக் கட்டுப்படுத்துகின்ற தற்போதைய காணிக்கொள்கைகளை மீளாய்வு செய்வது அவசியமானதாகும்.

தொழிலாளர் சந்தையில் காணப்படும் நெகிழ்ச்சித்தன்மை பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்களவில் பங்களிப்பதுடன் இது தொழில் வாய்ப்பையும் உருவாக்கும். இலங்கையில் தொழிலாளர் சந்தை பல நலிவுக்காரணிகளினால் பாதிக்கப்பட்டுள்ளது. முதலாவது, அவைகள் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளமையினால் மூலவளங்கள் திறமையற்ற வகையில் பங்கிடப்பட்டு அரசதுறைத் தொழில்நிலையின் மீது அழுத்தத்தையும் தோற்றுவிக்கின்றன. இரண்டாவது, கூலிகள் தொழில்நிலை மற்றும் தொழில்புரியும் சூழ்நிலைகள் என்பன அரசின் சட்டங்களினாலும் தொழிற்சங்க செல்வாக்கின் கீழும் பெருமளவிற்கு நிர்ணயிக்கப்படுகின்றன. இதன் கருத்து யாதெனில் பரந்தளவான தொழிலற்றோர் நிலைமையைக் கவனத்திற்கொண்டு கூலிவீதங்களை நிர்ணயிப்பதில் தொழிலாளர் சந்தை நிலைமைகள் போதுமான அளவு நெகிழ்வுத் தன்மையை வழங்கவில்லையென்பதேயாகும். இப்பின்னணியில், தொழிலாளர் சந்தைகள் தொடர்பாக தொழில் தருநர்-தொழிலாளர் உறவுமுறைக்கு நெகிழ்ச்சித் தன்மையை வழங்குவதற்கு கொள்கைச் சீராக்கங்களைப் பின்பற்றுவது அவசியமானதாகும். புதிய வேலைகளை நாடும் வேலையாட்களுக்கு விரும்பிய தொழில்களுக்கு மாறுவதில் போதுமானளவு ஆதரவினை வழங்குவதனை உறுதிப்படுத்தக்கூடிய நியாயமான தொழிலாளர் சட்டங்கள் ஒரு சீராகப் பிரயோகிக்கப்படும் கொள்கை மீது கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

வளர்ந்துவரும் தனியார் துறைக்கு அதிகரித்தளவு மூலவளங்களை விடுவிப்பதனைத் தூண்டக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்குகின்ற விதத்தில் பொருளாதார சீர்திருத்தங்களை நெறிப்படுத்துவதில் கவனம் செலுத்தல் வேண்டும். தற்பொழுது, இத்துறைக்கான நிதியியல் மூலவளங்களின் பாய்ச்சல் உயர்ந்த வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை ஊழியர் சேமநிதியம், ஓய்வூதிய நிதியம் போன்ற நிறுவனமயமாக்கப்பட்ட முதலீட்டாளர்களிடமிருந்து தனியார்துறையினால் பயன்படுத்தத்தக்க நீண்டகால நிதியங்களின் பயன்பாட்டைத் தடைசெய்கின்றது. பாரிய வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைகள், இறுக்கமான நாணயக் கொள்கையின் நடைமுறைப்படுத்தலை வலியுறுத்தின. தனியார்துறை முதலீடுகள் மீதான உயர்ந்த வட்டிவீதங்களின் பாதகமான தாக்கத்தினைப்பற்றி அதிகம் கூறவேண்டியதில்லை. தாழ்ந்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையினை நோக்கிய இறைச் சீர்திருத்தங்கள் தனியார்துறை முதலீடுகளுக்கு குறிப்பிடத்தக்களவு நிவாரணங்களை வழங்கும். அத்துடன் தனியார்துறைத்தொழில் முயற்சிகளில் ஊழியர் சேம நிதியினை முதலீடு செய்தல் போன்ற நிறுவனமயப்படுத்தப்பட்ட முதலீட்டாளர்களைத் தடைசெய்யும் தற்போதைய நிறுவனமயப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளை அகற்றுவதும் அவசியமானதாகும். வர்த்தக நடவடிக்கையில் பெருமளவு சுயநிர்ணயத்தை வழங்கும் விதத்தில் இரு அரச வங்கிகளையும் மேலும் மீளவமைப்பது வங்கித் தொழில் முறையில் போட்டிச் சூழ்நிலையை மேம்படுத்துவதற்கு அவசியமானதாக இருக்கும்.

இலங்கையின் வளர்ச்சி முயற்சிகள் உட்கட்டமைப்புக் குறைபாடுகளினால் கடுமையாக தடைப்பட்டன. வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள், தொலைத் தொடர்பூட்டல்கள், மின்வலு, துறைமுகப் பணிகள், நீர்வழங்கல் போன்ற மிக முக்கிய உட்கட்டமைப்புகளின் மீதான அரச முதலீடுகள் மொ. உ. உற்பத்தியில் ஏறத்தாழ 4 சதவீதமாக இருந்ததுடன் அதிகரித்துச் செல்லுகின்ற கேள்வியினை ஈடுசெய்வதற்கு அத்தகைய வசதிகளின் விரைவான விரிவாக்கம் பெருமளவிற்கு போதுமானதாக இருக்கவில்லை. எடுத்துக்காட்டாக மின்வலுவிற்கான கேள்வி தற்பொழுது ஏறத்தாழ 10 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருக்கின்றதெனினும் அதன் இயலளவு கடந்த நான்கு ஆண்டுகளாக அதிகரிக்கவில்லை. அதுமட்டுமன்றி தற்பொழுதுள்ள இயலளவுப் பயன்பாடு வானிலை நிலைமைகள் போன்ற புறக் காரணிகளில் பெருமளவிற்கு தங்கியிருக்கின்றமையால் வலு நிரம்பல் கட்டுப்பாட்டிற் கப்பாற்பட்ட காரணங்களால் அதிகளவிற்கு தளம்பலுறுகின்றது. இத்தகைய உட்கட்டமைப்பினை முகாமை செய்யும் அரச தொழில் முயற்சிகள் வெளிநாட்டு உதவியை அடிப்படையாகக் கொண்ட வரவு செலவுத் திட்ட ஆதரவில் தங்கியிருந்ததுடன் அவை முதலீட்டினை விரிவாக்குவதற்கான முதலிடத்தக்க மிகையினைப் போதுமானளவிற்கு உருவாக்கவில்லை. உட்கட்டமைப்புத் தேவைகளை ஈடுசெய்வதற்கான மூலவளங்களைத் திரட்டுவதில் வரவு செலவுத் திட்டத்திலுள்ள கட்டுப்பாடுகளைக் கவனத்திற்கொள்கையில் இம்முயற்சிகள் தமக்கு ஏற்பட்ட செலவினை ஈடுசெய்வதற்கு பொருத்தமான விலையிடற் கொள்கைகளைப் பின்பற்றுவதுடன் தனியார்துறை உதவிகளையும் நாட வேண்டியுள்ளது.

எதிர்காலத்தில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி வறுமையைக் குறைத்துவிடக்கூடிய வலுவான உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு அமைப்புச் சீராக்கங்களுடன் இணைந்த விதத்தில் பலமான இறைச் சீராக்க நிகழ்ச்சித் திட்டத்தினை பரந்தளவில் இலங்கை பின்பற்ற வேண்டும் என்பதே மேற்கூறிய கலந்துரையாடல்களின் தவிர்க்க முடியாத முடிவுகளாக அமைந்துள்ளன. மூன்றாண்டுகளைக் கொண்ட நடுத்தர கால வரையறைக்குள் அதாவது 1997 இல் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை மொ.உ. உற்பத்தியின் 5 சதவீத மட்டத்தில் 1994 வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையில் அரைப்பங்கிற்கு குறைத்துவிடுவதும் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கான தடைகளை அகற்றுவதற்கான அமைப்புச் சீராக்கங்களைப் பின்பற்றுவதும் புதிய அரசு இத்தகைய குறிக்கோள்களை அடைவதற்கு சரியான திசையில் எடுத்த முயற்சிகளாகும்.